# உள்ளடக்கம்


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| * | நிறுவனத்தின் நிருவாகக் கூற்று | 02 |
| * | நிருவாக சபை உறுப்பினர்கள் | 03 |
| * | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் | 04 |
| * | தத்துவ ரீதியான அதிகார மீளாய்வு மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகைகளை மேம்படுத்துவதற்கான நிறுவன ரீதியான செயற்பணி | 05-11 |
| | அ. தத்துவ ரீதியான அதிகாரங்கள் | |
| | ஆ. நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள் | |
| | இ. நிறுவகத்தின் மதியுரைச் சேவைகள் - இலக்குக் குழுக்கள் | |
| | ஈ தொழில்ரீதியான ஒருங்கிணைப்பும் கண்காணிப்பும் - தேசிய மற்றும் சர்வதேச கற்கை, பயிற்சி நிறுவனங்களுடனான தொடர்புகள் | |
| | உ. நிறுவகத்தின் முகாமைத்துவ ஒழுங்கமைப்பு | |
| | ஊ. உதவிப் பதவியணியினரை வளர்த்துக்கொள்ளல் | |
| * | 2013 ஆம் ஆண்டுக்கான நிறுவக பதவியணியினரது ஒழுங்கமைப்பு | 12 |
| * | 2013 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை | 13-27 |
| | அ. மனிதவள அபிவிருத்திப்பிரிவு | |
| | ஆ. பொறியியல் பிரிவு | |
| | இ. பொது முகாமைத்துவப் பிரிவு | |
| | ஈ. பௌதீக திட்டமிடல் பிரிவு | |
| | உ. நிதி முகாமைத்துவப் பிரிவு | |
| | ஊ சட்டப் பிரிவு | |
| | எ. மாகாண பயிற்சி பிரிவு | |
| | ஏ. திறன் விருத்திப் பிரிவு | |
| | ஒ. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு | |
| * | 2013 ஆம் ஆண்டின் நிதிசார் தகவல்கள் | 28-40 |
| | அ. நிதிச் செயற்பாடுகள் பற்றிய கூற்று | |
| | ஆ. நிதி நிலைமை பற்றிய கூற்று | |
| | இ. திரண்ட காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று | |
| | ஈ. தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய கூற்று | |
| | உ. கணக்கீட்டுக் குறிப்புக்கள் | |
| * | கணக்காய்வுக் கருத்துக்கள் | 41-53 |
| * | நிறைவு | 55-56 |

## 1.0 நிறுவனத்தின் நிருவாகக் கூற்று

| | | | |
|---|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : | | இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் (1999 இன் 31 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டது) |
| செயற்பாடு ஆரம்பித்த திகதி | : | | 15.10.1999 |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | : | | இலக்கம் 17, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 |
| கணக்காய்வாளர்கள் | : | | கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம். |
| வங்கியாளர்கள் | : | | இலங்கை வங்கி,<br>சுதந்திர சதுக்கக் கிளை,<br>கொழும்பு – 07 |
| வெளிநாட்டு நிறுவனங்கள் | : | அ. | CLGF |
| | | ஆ. | பொதுநலவாய உள்ளூராட்சி ஒன்றியம் |
| உள்நாட்டு நிறுவனங்கள் | : | அ. | இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் ஒன்றியம் |
| | | ஆ. | ஆசிய மன்றம், கொழும்பு |
| | | இ. | கெயார் இன்ரநெசனல் |
| இணைந்த கருத்திட்டங்கள் | : | அ. | உலக வங்கியினால் நிதி வழங்கப்படுகின்ற கிராமிய வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் |

## 2.0 இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் நிருவாக சபை

பதவிவழியாக நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் எட்டு பேரையும் (08), நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் ஐந்து பேரையும் (05) கொண்டதாக பதின்மூன்று (13) உறுப்பினர்களை இந்த நிருவாக சபை உள்ளடக்கியுள்ளது.

2.1 பதவி வழியாக மற்றும் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் பின்வருமாறாகும்.

- திரு ஆர்.ஏ.ஏ.கே. ரணவக்க - தவிசாளர்
  செயலாளர் – உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு
- திரு பீ.பி. அபேகோன் - உறுப்பினர்
  செயலாளர் – பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு
- திரு விமலசிறி பெரேரா
  செயலாளர், நிருமாண, பொறியியல் சேவைகள்,
  வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சு - உறுப்பினர்
- திரு விஜித் கனுகல - உறுப்பினர்
  பணிப்பாளர், கலாசார, கலை அலுவல்கள் திணைக்களம்
- திரு பி.எம்.யு.டி. பஸ்நாயக்க - உறுப்பினர்
  செயலாளர், சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு
- திரு ஏ.கே. செனவிரத்ன - உறுப்பினர்
  மேலதிகப் பணிப்பாளர் நாயகம்,
  தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
  நிதி, திட்டமிடல் அமைச்சு
- பேராசிரியர் (திருமதி) ஏ.எஸ்.பி. அபயரத்ன - உறுப்பினர்
  மதியுரையாளர் –பேராதனை பல்கலைக் கழகம்

- டாக்டர் எம்.ஏ. அப்துல் ரகீஸ்து - உறுப்பினர்
  பொறுப்புவாய்ந்த மருத்துவ அலுவலர்,
  சுகாதார அலுவலகம்
- பொறியியலாளர் எம்.எஸ். நசார் - உறுப்பினர்
  கௌரவ உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரின்
  ஒருங்கிணைப்புச் செயலாளர்
- திரு எம்.எச்.ஏ. சமத் - உறுப்பினர்
  கௌரவ உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரின்
  அந்தரங்கச் செயலாளர்
- திரு ஐ.ஏ. ஹமீட்
  பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர், - உறுப்பினரும்,
  இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் கூட்ட ஏற்பாட்டாளரும்

நிருவாக சபையின் செயலாளர்

- திருமதி நிரஞ்சலா பெரேரா

## 3.0 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள்

2013 ஆம் ஆண்டில் பின்வரும் உறுப்பினர்கள் மேற்படி குழுவின் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அ. திரு ஏ.கே. செனவிரத்ன - தவிசாளர்
மேலதிகப் பணிப்பாளர் நாயகம்,
தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

ஆ. பொறியியலாளர் எம்.எஸ். நசிர் - உறுப்பினர்
கௌரவ உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரின்
ஒருங்கிணைப்புச் செயலாளர்

இ. திரு எம்.எச்.ஏ. சமத் - உறுப்பினர்
கௌரவ உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரின்
அந்தரங்கச் செயலாளர்

ஈ. திரு ரஞ்ஜித் லியனஆரச்சி - ஏற்பாட்டாளர்
உள்ளகக் கணக்காய்வாளர்,
இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்

**வெளிப்புற அவதானிப்பாளர்கள்**

செலவி உதேனி பெரேரா
கணக்காய்வு அத்தியட்சகர்.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயலாளர்**

திருமதி நிரஞ்சலா பெரேரா - பணிப்பாளர் சபையின் செயலாளர்

## 04. தத்துவ ரீதியான அதிகார மீளாய்வு மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகைகளை மேம்படுத்துவதற்கான நிறுவன ரீதியான செயற்பணி

நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகையை வளர்ப்பதற்கான எதிர்கால நோக்கு அவசியமாக இருந்த சூழலில் இந்த நிறுவகம் உருவாக்கப்பட்டது. இந்த நோக்கை யதார்த்தமாக மாற்றியமைத்துக் கொள்வதற்காக அது பற்றி ஆராய்ந்து சிபார்சுகளைச் சமர்ப்பிக்கும் பொருட்டு 1997 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. நாட்டின் உள்ளூராட்சித் துறையின் செயலாற்றுகையை வளர்க்கும் தேவைப்பாட்டுக்கான செயற்பணியை நிறைவேற்றுவதற்காக புதிய நிருவாகம் ஒன்றை உருவாக்குவதன் முக்கியத்துவம் இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் வலியுறுத்தப்பட்டது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக மக்கள் எதிர்பார்க்கின்ற வகையில் வினைத்திறனும் திருப்திகரமானதுமான சேவையை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கக் கூடிய மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நேரடியாக பங்களிப்புச் செய்யக்கூடிய சுய அதிகாரம் கொண்ட சுயாதீனப் பிரிவொன்றாக உள்ளூராட்சி மன்றங்கள் கவனத்திற்கொள்ளப்படல் வேண்டுமென ஜனாதிபதி ஆணைக்குழு வலியுறுத்தியது. இந்த அபிப்பிராயங்களை அடைந்துகொள்வதற்குப் பொருத்தமான நிறுவனமாக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் இருக்குமெனக் கருதப்பட்டது. பொதுமக்களுக்கு நெருக்கமான ஜனநாயக நிறுவனம் என்றவகையில், மக்களின் பிரதிநிதித்துவ நிறுவனமாக செயற்படும் ஆற்றலைக் கொண்டுள்ள பண்புகள் இந்த நிறுவனத்திற்கு உரித்தானதாகவுள்ளன. இந்த அபிப்பிராயங்களுக்கமைய செயற்பட்டு 1999 இன் 31 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தாபிக்கப்பட்டது. அதே ஆண்டு ஒக்டோபர் மாதம் அதன் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

பொதுமக்களுக்கு வினைத்திறனும் திருப்திகரமுமான சேவையை நிறைவேற்றக்கூடிய வகையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முகாமைத்துவத்தையும் நிறுவன ரீதியான செயலாற்றுகை மட்டங்களையும் வளர்ப்பது இந்த நிறுவகத்தின் அடிப்படை நோக்கமாகும். 1987 இன் 13 ஆம் இலக்க அரசியல் யாப்புத் திருத்தத்திற்கமைய, ஆட்சி அதிகாரங்களை பன்முகப்படுத்தும் முறைமை உருவானது. ஆட்சி அதிகாரத்தை கையளிக்கும் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கும் ஜனநாயக ரீதியான அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குமாக பொறுப்பளிக்கப்பட்ட அதிகாரத்தை முறையாக அமுல்படுத்துவது அத்தியவசியமான நிபந்தனையொன்றாகும். அதற்கமைய நிறுவன ரீதியான நிருவாகச் செயற்பணியொன்றை மாகாண சபை மட்டத்தில் தாபிக்க எதிர்பார்க்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டவாறு இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தாபிக்கப்பட்டு இதுவரை 12 வருடங்கள் கடந்துள்ளன. இந்தக் காலப்பகுதிக்குள் வருடாந்தம் அமுல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் இதன் நிருவாக சபையின் வழிகாட்டலின் கீழ் நிறுவகத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை உற்பத்தித் திறன் மிக்கவாறு அடைந்து கொள்வதற்கான எண்ணக்கருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தமது எண்ணக்கரு ரீதியான இலக்குகள், நோக்கங்களை குறுங்காலத்தில் வெற்றிகரமாக அமுல்படுத்தும் பொருட்டு சர்வதேச உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் உள்நாட்டு பயிற்சி நிறுவனங்களின் பூரண ஒத்துழைப்பையும் பெற்றுள்ளது. இந்த நிறுவகத்தின் விசேட மதியுரைப் பணிக்கான சபையின் பல்வேறு பங்களிப்பு மற்றும் ஆராய்ச்சிப் பங்களிப்பு நிறுவகத்தின் உத்தேச நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பெரும் உதவியாக அமைந்துள்ளன.
எவ்வாறாயினும், பன்முகப்படுத்தும் வேலைத்திட்டம் குறிப்பாக அதனை அமுல்படுத்தும் பணிகளில் ஓரளவு தூரமாகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

- பன்முகப்படுத்துவதன் பெறுபேறாக இடம்பெறக்கூடிய வினைத்திறன் மற்றும் சமூகத்தின் முன்னுரிமை மற்றும் துரிதமாக தீர்த்து வைக்கப்பட வேண்டிய சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு வளங்களை பகிர்ந்தளிப்பதை உறுதிப்படுத்தல்.

- கொள்கைகளைத் தயார் செய்யும் போது பன்முகப்படுத்தலினூடாகக் கிடைக்கின்ற பயன்களை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் மற்றும் இலக்குக் குழுக்களின் தேவைகளுக்காக கொள்கைகளை அமுல்படுத்தல்.

- வறுமையை குறைக்கும் போதும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பன்முகப்படுத்தலின் மூலம் கிடைக்க வேண்டிய பயன்மிக்க நிலைமை.

- குறிப்பாக வறுமையினால் பாதிக்கப்படுகின்ற மக்கள் மற்றும் பிரஜைகள் தொடர்பில் காட்டப்படுகின்ற முன்னுரிமையை வெளிப்படுத்தும் பொருட்டு இந்த மட்டங்களில் மேற்கொள்ளும் தீர்மானங்களை அமுல்படுத்தல்.

- கிராமிய மட்டத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அவர்களின் பங்கேட்புடனான தீர்மானம் மேற்கொள்வதில் கவனம் செலுத்தல்.

அதற்கமைய உள்ளூராட்சி மன்றங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்ற மாகாண மட்டத்திலான ஜனநாயக செயற்பாடு தொடர்பில் வழிகாட்டல் மற்றும் அதற்குப் பொருத்தமானவாறு உள்ளூராட்சி மன்றங்களினதும், மாகாண சபைகளினதும் சாத்தியக்கூறை வளர்க்கும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவது ஒவ்வொரு வருடமும் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது.

### 4.1 தத்துவ ரீதியான அதிகாரங்கள்

உபாய முறையிலான திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான அரசதுறை நிறுவனம் என்றவகையில் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தாபிக்கப்பட்டுள்ளது.

- நாட்டில் நல்லாட்சியை உறுதி செய்யும் நோக்கத்துடன், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஏனைய பதவியணியினரைப் பயிற்றுவிப்பதற்கு வினைத்திறன் மிக்க பதவியணியினரை இந்த நிறுவனம் ஊடாக உருவாக்குதல்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்துவதற்கான ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முகாமைத்துவக் கட்டமைப்பையும், செயற்பாடுகளையும் பகுப்பாய்வு ரீதியாக மதிப்பிடுவதற்குத் தேவையான மேடையை பெற்றுக் கொடுத்தல்.

- முகாமைத்துவத்தை மேம்படுத்தும் போது மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளுக்கு உதவுதல்.

- உள்ளூராட்சி பற்றிய தேசிய கொள்கைகளைத் தயார் செய்வதற்குத் தேவையான தகவல்களை கௌரவ அமைச்சருக்குப் பெற்றுக்கொடுத்தல்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிய நூல்கள் மற்றும் சஞ்சிகைகளை வெளியிடுவதற்கும், தகல்களைப் பிரபல்யப்படுத்துவதற்குமான கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடாத்துவதற்கும், உள்நாட்டு வெளிநாட்டு இணையத்தளங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல்.

### 4.2 நோக்கு

"மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சித் துறையின் கற்கைகள் தொடர்பான முதற்தர தேசிய நிறுவகமாதல்"

### 4.3 செயற்பணி

"மக்களுக்கு வினைத்திறனும், உற்பத்தித்திறனும்மிக்க சேவையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன், பயிற்சி, ஆராய்ச்சி சேவைகள் மற்றும் ஆலோசனை உதவிகளை வழங்குவதன் மூலம் உபதேசீய மட்டத்தில் காணப்படுகின்ற அரச நிறுவனங்களின் அங்கத்தவர்கள் மற்றும் அவற்றில் சேவையாற்றுகின்ற அலுவலர்களின் சாத்தியக்கூறை வளர்த்தல் "

### 4.4 நோக்கங்கள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பணி பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

1. உள்ளூராட்சி மன்றங்களின் தாபன ஆற்றலை மேம்படுத்துவதற்கான செயலாற்றுகைக்கு ஏற்புடையதாகின்ற நிகழச்சித்திட்டங்களை மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளுடன் இணைந்து தயார் செய்தல்.

2. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகையை வளர்ப்பதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்வதற்காக மற்றும் நடாத்துவதற்காக மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளை வலுவூட்டுவதும், அப்பணிகளுக்கு உதவுவதும்.

3. உள்ளூராட்சித் துறையின் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் வேறு தகவல்களைப் பெற்றுக் கொடுத்து உள்ளூராட்சி பற்றிய வள நிலையமாக செயற்படுதல்.

4. உரிய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் ஊடாக உள்ளூராட்சி தொடர்பான கேந்திர நிறுவனமொன்றாக செயற்படுதல்.

5. மனித வள முகாமைத்தவத்தை மேம்படுத்தல், முகாமைத்துவக் கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் நிறுவன ரீதியான மாற்றங்கள் போன்றன தொடர்பில் விசேடமான உதவிச் சேவைகளை உப தேசிய மட்டத்திலான அரச நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.

6. உள்ளூராட்சி மன்றங்களை வலுவூட்டுவதற்கான பயிற்சிகள், ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் செயலாற்றுகையை மேம்படுத்தல்.

## 4.5 இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் ஆற்றப்படுகின்ற மதியுரைச் சேவை

ஆலோசனைச் சேவைகளுக்காக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகமானது, ஏழு (07) பிரிவுகளைத் தாபித்துள்ளது.

அ. பொறியியல்
ஆ. பொது முகாமைத்துவம்/மனித வள அபிவிருத்தி
இ. பௌதீக திட்டமிடல்
ஈ. நிதி முகாமைத்துவம்
உ. சட்டரீதியான மற்றும் சட்டவாக்கப் பணிகள்
ஊ. ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்
எ. பயிற்சியும், அபிவிருத்தியும்

## 4.6 இலக்குக் குழுக்கள்

பயிற்சிகள், ஆராய்ச்சி மற்றும் ஏனைய செயலமர்வுகள் போன்ற பயன்களைப் பெறுகின்ற 9 மாகாண சபைகள் மற்றும் 335 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இவற்றுக்கெனத் தெரிவு செய்யப்பட்ட 418 பிரதிநிதிகள் மாகாண சபைகளிலும் 4391 பிரதிநிதிகள் உள்ளூராட்சி மன்றங்களிலும் உள்ளனர். உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்துகின்ற அலுவலக ஊழியர்கள், வெளிக்கள ஊழியர்கள் போன்ற பல்வேறு தரங்களைச் சேர்ந்த சுமார் 50,000 ஊழியர்கள் உள்ளடங்குகின்றனர்.

இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள அவ்வவ் குழுவினர்கள் மற்றைய குழுவினரிலிருந்து வித்தியாசப்படுகின்றர். மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளுடன் கருத்துப் பரிமாற்றத்தின் பின்னர் தேவைகளுக்கமைய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சி அமர்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன. மாகாண திட்டமிடல் தொடர்பாக ஒத்துழைப்பு ரீதியான செயற்பணியொன்று எமது நிறுவனத்தினால் நிறைவேற்றப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டுள்ள பயிற்சித் தேவைகளுக்கு மேலதிகமாக 2012 ஆம் ஆண்டுக்குரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் முன்னெடுத்து 2013 ஆம் ஆண்டில் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## 4.7 ஒருங்கிணைப்பும், கண்காணிப்பும்

மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி அலகுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர்களினால் (மாகாணம்) நடாத்தப்படுகின்ற பயிற்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதும், கண்காணிப்புச் செய்வதும் இந்த நிறுவனத்தின் முக்கிய பணியொன்றாகக் கருதப்படுகின்றது. மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி அலகுகள் மற்றும் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற மாதாந்த மீளாய்வுக் கூட்டங்களின் போது முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 4.8 வியாபார அபிவிருத்தி

அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் பல அவர்களின் பெரும்பாலான கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் உதவியை எதிர்பார்ப்பதை கடந்தகால அனுபவங்கள் சுட்டிக்காட்டுகின்றன. சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கான கருத்திட்டங்களை இனங்காண்பதற்காக இந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் அவசியமாகும். இந்த வியாபார அபிவிருத்தி நடவடிக்கைகள் எமது நிறுவகத்தின் பணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் காணப்படுகின்றன. அவர் உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி நிருவாக சபையின் அங்கீகாரத்துடன் தகுந்தவாறு அவற்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வார்.

## 4.9 தேசிய மற்றும் சர்வதேச கற்கை, பயிற்சி நிறுவனங்களுடனான தொடர்புகள்

தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இந்தத் தொடர்புகள் இரு தரப்பினரதும் நலனுக்காகப் பேணிவரப்படுகின்றன. இவ்வாறு ஏற்படுத்திக்கொள்ளப்படுகின்ற தொடர்புகள் நாட்டிற்கு வெளியேயான பயிற்றுவிப்புத் தேவைகள் மற்றும் அவர்களின் ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கின்றன. 2013 ஆம் ஆண்டில் எமது நிறுவனம் LOGOTRI, UESCAP, JAIKA, CITY NET, USAID மற்றும் UN Habitat ஆகிய நிறுவனங்களுடன் தொடர்ச்சியாகத் தகவல்களைப் பரிமாற்றிக்கொள்வதற்கு எதிர்பார்த்ததுடன் அதற்கமைய செயற்பட்டது.

## 4.10 இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் முகாமைத்துவ ஒழுங்கமைப்பு

நிறுவகத்தின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாடு பற்றிய சகல தீர்மானங்களும் நிர்வாக சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு சில அமைச்சுக்களின் செயலாளர்களும், தொழில்சார் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் நிருவாக சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

நிருவாக சபையின் அழைப்பாளர் என்ற வகையில் செயற்படுகின்ற பணிப்பாளர் இந்த நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாவார். நிருவாக சபையின் ஒட்டுமொத்த வழிகாட்டல்களும் அவரின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. பணிப்பாளரின் உதவிக்கு ஆலோசனைக் குழுவொன்று, பிரதிப் பணிப்பாளர்கள், கணக்காளர் மற்றும் உதவிப் பதவியணியினர் உள்ளனர்.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தற்போது பிரதானமாக 7 பிரிவுகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. மனிதவள அபிவிருத்திப் பிரிவு, பொறியியல் பிரிவு, பொது முகாமைத்துவ பிரிவு, பௌதீகத் திட்டமிடல் பிரிவு, நிதி முகாமைத்துவ பிரிவு, சட்ட ரீதியான மற்றும் சட்டவாக்கப் பிரிவு, ஆராய்ச்சி, வெளியீடுகள் பிரிவு, நிருவாகம் மற்றும் கணக்குகள் பிரிவு ஆகிய பிரிவுகள் இதன் கீழ் காணப்படுகின்றன.

### 4.11 உதவிப் பதவியணியினரை வளர்த்துக்கொள்ளல்

அபிவிருத்தி/ நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களாக பட்டதாரிகள் அண்மைக்காலத்தில் நியமனம் செய்யப்பட்டதையடுத்து, சகல உள்ளூராட்சி மன்றங்களினதும் மனித வளச் செயலாற்றுகை வளர்ச்சியடைந்துள்ளது. இது ஒரு சாதகமான காரணியாகும். எவ்வாறாயினும் ஊழியர்களிடமிருந்து நல்லதொரு சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக உள்ளூராட்சியின் செயலாற்றுகையையும் அந்த செயலாற்றுகையின் தரத்தையும் மேம்படுத்துவது அத்தியவசியமானதொரு விடயமாகும்.

எனவே, வினைத்திறன் மிக்கதும், விளைதிறன் மிக்கதுமான சேவை நிலைமையை உருவாக்கிக் கொள்வதற்காக அவர்களின் அறிவையும், புரிந்துணர்வையும் மேம்படுத்தும் பொருட்டு பதவியணியினரை அறிவுறுத்துவதற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் எமது நிறுவகத்தினால் திட்டமிடப்பட்டுள்ளன.

## 5.0 2013 ஆம் ஆண்டுக்கான நிறுவகத்தின் பதவியணியினரது ஒழுங்கமைப்பு

2013 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த பதவியணியினர் பற்றிய ஒழுங்கமைப்பு பின்வருமாறாகும்.

| பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | | | சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | நிறைவேற்று | நிறைவேற்று அல்லாத | மொத்தம் | நிறைவேற்று | நிறைவேற்று அல்லாத | மொத்தம் |
| நிருவாக பிரிவு | 06 | 22 | 29 | 04 | 16 | 20 |
| பொறியியல் பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| முகாமைத்துவ, மனித வளப் பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| பௌதீகத் திட்டமிடல் பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| நிதி முகாமைத்துவப் பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| சட்டப்பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| ஆராய்ச்சிப் பிரிவு | - | 02 | - | 01 | 01 | 02 |
| பயிற்றுவித்தல் பிரிவு | - | 01 | - | 01 | 01 | 02 |
| கணக்குகள் பிரிவு | 02 | 03 | 05 | - | 03 | 03 |
| **மொத்தம்** | | | **44** | **மொத்தம்** | | **37** |

## 6.0 2013 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை

| | விபரம் | அங்கீகரிக்கப் பட்ட வரவுசெலவுத் திட்டம் | மொத்தச் செலவினம் | அங்கீகரிக்கப் பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் பயன்படுத்திய விகிதம் | பூர்த்தி செய்யப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | பொறியியல் பிரிவு | 2,500,000.00 | 1,786,372.00 | 71% | 16 |
| 02 | பொது முகாமைத்துவப் பிரிவு | 2,500,000.00 | 2,074,931.00 | 83% | 33 |
| 03 | பௌதீகத் திட்டமிடல் பிரிவு (பயிற்சிப் பிரிவுக்கு ரூபா 500,000 பொறுப்பளிக்கப்பட்டது) | 2,000,000.00 | 1,813,481.00 | 91% | 37 |
| 04 | நிதிப் பிரிவு | 2,500,000.00 | 3,338,530.10 | 113% | 134 |
| 05 | சட்ட நடவடிக்கைகள் பிரிவு | 2,500,000.00 | 2,371,132.00 | 95% | 40 |
| 06 | பயிற்சிப் பிரிவு - மாகாண மட்டத்திலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 700,000.00 | 781,083.50 | 98% | 22 |
| 07 | இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் ஆற்றல் விருத்தி (பயிற்சிப் பிரிவுக்கு ரூபா 200,000 மாற்றப்பட்டது) | 2,800,000.00 | 3,711,585.30 | 132% | -- |
| 08 | ஆராய்ச்சி, நூலகம் மற்றும் வெளியீடுகள் | 2,500,000.00 | 2,317,996.25 | 93% | 09 |
| **மொத்தம்** | | **18,000,000.00** | **18,195,111.15** | | |

## 7.0 நிறுவகத்தின் ஒவ்வொரு பிரிவுகளினதும் செயலாற்றுகைத் தகவல்கள்

### 7.1 பொறியியல் பிரிவு

உள்ளூராட்சி மன்றங்களின் தொழில்நுட்பப் பிரிவுகள் மற்றும் மாகாண சபைகளின் பொறியியல் பிரிவுகளின் செயலாற்றுகையை மேம்படுத்துகின்ற பொறுப்பைக் கொண்டு செயற்படுவது இந்த நிறுவனத்தின் பிரிவு பொறியியல் பிரிவாகும். நிறுவன ரீதியான நோக்கங்களுக்கமைய பயிற்றுவித்தல், ஆராய்ச்சி போன்றவற்றினூடாக இந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொறியியலாளர்கள், வேலைப் பொறுப்பு அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களுக்கு ஏற்புடையவாறு குறித்த துறைகளில் இந்த ஆண்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக திறன்களை விருத்திசெய்வது சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களும் மாகாண சபைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களுக்காக நடாத்தப்பட்டுள்ளன.

- ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட தொகை - (இலங்கை ரூபா. 000) – ரூபா 1786
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் – 16
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் – 71%

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | வரவுசெலவுத் திட்டத்திற்கமைவான நாட்களின் எண்ணிக்கை | உண்மையான நாட்களின் எண்ணிக்கை | வரவுசெலவுத் திட்டத்தின் படியான செலவினம் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| E-01 | மாகாண பொறியியலாளர்களுக்காக நடாத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் | 06 | | 240,000.00 | |
| E-02 | உள்ளூராட்சி மன்றங்களில் சேவையாற்றும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 08 | 06 | 240,000.00 | 701,312.04 |
| E-03 | மாகாணசபைகளின் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 04 | 04 | 150,000.00 | 274,358.50 |
| E-04 | உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஏனைய தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 06 | 01 | 260,000.00 | 42,069.00 |
| E-05 | உள்ளூராட்சி மன்றங்களின் வேலைப் பொறுப்பு அதிகாரிகளுக்கான பயிற்சி செயலமர்வுகள் | 02 | | 150,000.00 | |
| E-06 | கிழக்கு மாகாணத்திற்கான விசேட நிகழ்ச்சித்திட்டம் | 04 | | 160,000.00 | |
| E-07 | வட மாகாணத்திற்கான விசேட நிகழ்ச்சித்திட்டம் | 04 | 02 | 240,000.00 | 230,446.50 |
| E-08 | மாகாண சபை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 | 03 | 500,000.00 | 538,186.00 |
| E-09 | கிராமிய வீதி பற்றிய தரவுக் கட்டமைப்பை இற்றைப்படுத்தல | 14 | | 560,000.00 | |
| E-10 | உள்ளூராட்சி பொறியியல் டிப்ளோமா பாடநெறியை நடாத்தல் | 02 | | 560,000.00 | |
| E-11 | தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் ஏற்புடைய ஏனைய அலுவலர்களின் அறிவை விருத்தி செய்தல் | 14 | | 560,000.00 | |
| | **மொத்தம்** | **76** | **16** | **2,500,000.00** | **1,786,372.00** |

## 7.2 பொது முகாமைத்துவ மற்றும் மனித வள அபிவிருத்திப் பிரிவு

இலங்கையின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களினதும், அலுவலர்களினதும் மனிதவள முகாமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் பொது முகாமைத்துவப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவினால் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தற்போதைய சாத்தியக்கூறினை வளர்க்க வேண்டியதன் அவசியத்தன்மை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு தாபனரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அரசியல் தலைமைத்துவம், அலுவலர்கள் மற்றும் சிவில் சமூக அங்கத்தவர்கள் மத்தியில் அதிகாரப் பகிர்வு மற்றும் நல்லாட்சி பற்றிய அறிவை வளர்ப்பதற்கு இதன் போது முன்னுரிமை வழங்கப்படுகின்றது. தேசிய மட்டத்தில் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக தேவைகளுக்கு ஏற்றவாறு

விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

நாட்டிலும், பிராந்தியத்திலும் உள்ளூராட்சி தொடர்பான சிறந்த நடைமுறைகள் தொடர்பாக ஆராய்ந்த பின்னர் ஒவ்வொரு வருடமும் செயல்ரீதியான திட்டமொன்று தயார் செய்யப்படுகின்றது. குறிப்பாக தற்போதைய சூழலை எடுத்துநோக்கும் போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படுகின்ற சாத்தியக்கூறு மட்டடங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது.
இப்பிரிவின் குறிக்கோள்கள் :

- ❖ நல்லாட்சியை அடைந்து கொள்வதற்காக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களினதும், அதன் அலுவலர்களினதும் முகாமைத்தவ ஆற்றல்களை மேம்படுத்தல்.

- ❖ சமுதாயத்திற்கு சிறந்த சேவையை ஆற்றுவதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் அவற்றில் சேவையாற்றுகின்ற அலுவலர்களின் செயலாற்றுகையை மேம்படுத்தி, அவர்களில் கருத்துரீதியான மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்தல்.

- ❖ உப தேசிய மட்டத்தில் அபிவிருத்தி தொடர்பாக தடைகள் காணப்படின் அவற்றை அகற்றுவதற்காக தனியார் துறை மற்றும் அரசதுறைக்கு இடையே பங்குடைமையை வளர்த்தல்.

- ❖ பொது மக்களுக்கு மிகவும் சிறந்ததொரு சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கும், ஏனைய வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தவும், நிறுவனங்களின் வினைத்திறன், விளைதிறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.

- ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட தொகை (இலங்கை ரூபா. 000) – ரூபா 2074/-
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் – 33
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் – 83%

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | வரவுசெலவுத் திட்டத்திற்கமை வான நாட்களின் எண்ணிக்கை | உண்மையான நாட்களின் எண்ணிக்கை | வரவுசெலவுத் திட்டத்தின் படியான செலவினம் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| GM 01 | ஆற்றல் விருத்திக்கான நிகழ்ச்சித்திட்டம் | 12 | 06 | 480,000.00 | 304,075.00 |
| GM 02 | உள்ளூராட்சி மன்றங்களுக்கான கருத்திட்ட முகாமைத்துவம் | 08 | 02 | 320,000.00 | 96,900.00 |
| GM 03 | நூலக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 06 | 04 | 240,000.00 | 339,854.00 |
| GM 04 | பாலர் பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 02 | 04 | 80,000.00 | 102,455.00 |
| GM 05 | அலுவலக முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 | 11 | 400,000.00 | 467,279.00 |
| GM 06 | பொதுசன தொடர்பு முகாமைத்துவம் | 04 | 00 | 160,000.00 | - |
| GM 07 | உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் (5 S) | 01 | 00 | 40,000.00 | - |
| GM 08 | செயலாற்றுகை மதிப்பீடு, பணி விபரங்களைத் தயார் செய்தல், பயிற்சி நாற்காட்டிகளைத் தயார் செய்தல் போன்றன தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் | 06 | 06 | 240,000.00 | 260,242.00 |
| GM 09 | விசேட செயற்பாடுகள் | - | - | 40,000.00 | - |
| GM 10 | மாகாண சபைகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | - | - | 500,000.00 | 504,126.00 |
| | **மொத்தம்** | **49** | **33** | **2,500,000.00** | **2,074,931.00** |

## 7.3 பௌதீக திட்டமிடல் பிரிவு

பௌதீக திட்டமிடல் துறையின் அறிவு, கருத்துக்கள், நிபுணத்துவம் மற்றும் சேவை சார்ந்த தர நியமங்கள் பற்றிய அறிவை வளர்த்து இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளின் அரசியல் பிரதிநிதிகளினதும் சம்பந்தப்பட்ட வேறு அலுவலர்களினதும் செயலாற்றுகையை வளர்த்தல், பயிற்சி மற்றும் மதியுரைச் சேவைகளினால் நிறைவேற்றப்படுகின்ற செயலாற்றுகையை வளர்ப்பது இந்தப் பிரிவின் பிரதான நோக்கமாகும். இறுதி நோக்கமாகவிருப்பது, குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை மட்டம் மற்றும் சுற்றாடலை நல்ல முறையில் சிறந்ததாக மாற்றியமைப்பதாகும்.

- ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட தொகை - (இலங்கை ரூபா. 000) – ரூபா 1813/-
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் – 37
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் – 91%

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | வரவுசெலவுத் திட்டத்திற்கமைவான நாட்களின் எண்ணிக்கை | உண்மையான நாட்களின் எண்ணிக்கை | வரவுசெலவுத் திட்டத்தின் படியான செலவினம் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| PP/NL/01 | உள்ளூராட்சி மன்றங்களுக்கான பௌதீகத் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டம் (சிங்கள மொழி மூலம்) | 02 | 02 | 80,000.00 | 150,000.00 |
| PP/NL/02 | உள்ளூராட்சி மன்றங்களுக்கான பௌதீகத் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டம் (தமிழ் மொழி மூலம்) | 02 | 02 | 80,000.00 | 71,525.00 |
| PP/NL/03 | அனர்த்தங்களைக் குறைப்பது பற்றிய நிகழ்ச்சித்திட்டம் | 04 | 04 | 160,000.00 | 115,000.00 |
| PP/NL/04 | விலை மதிப்பீடு பற்றிய நிகழ்ச்சித்திட்டம் | 04 | 04 | 160,000.00 | 350,285.00 |
| PP/NL/05 | GIS/GPS தொலைத்தொடர்பு தொடர்பான திறன்விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 20 | 15 | 960,000.00 | 669,000.00 |
| PP/NL/06 | சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் | 06 | 04 | 240,000.00 | 209,720.00 |
| PP/NL/07 | GIS/GPS பற்றிய செயன்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 08 | 06 | 320,000.00 | 247,951.00 |
| PP/A/01 | விசேட செயற்பாடுகள் | | | 100,000.00 | பயிற்சி பிரிவுக்கு மாற்றப்பட்டது |
| PP/PL/01 | மாகாண சபை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | | | 400,000.00 | |
| | **மொத்தம்** | **46** | **37** | **2,000,000.00** | **1,813,481.00** |

## 7.4 நிதி முகாமைத்துவப் பிரிவு

நிதி முகாமைத்துவப் பிரிவு பிரதானமாக பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும்.

- ❖ நிதி முகாமைத்துவம் தொடர்பாக உள்ளூராட்சி மன்றப் பதவியணியினரின் அறிவையும், புரிந்துணர்வையும் வளர்த்தல்.
- ❖ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு நிதி முகாமைத்துவம் பற்றிய செயலமர்வுகளை நடாத்தல்,
- ❖ நிதி முகாமைத்துவம் பற்றிய வினைத்திறனை மேம்படுத்துவதற்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு மதியுரைச் சேவைகளையாற்றுதல்.
- ❖ நிதி முகாமைத்துவம் தொடர்பாக பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல்.

இது சம்பந்தமாக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தயார் செய்துள்ள நிகழ்ச்சித்திட்டம் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகையை மேம்படுத்தக் காரணமாக அமைந்துள்ளது. அது தவிர நிதி முகாமைத்துவம் பற்றி சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் இன்னும் காணப்படுகின்றன. அவசியத்தன்மையின் அடிப்படையில் பின்வரும் விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- ❖ நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதும் சமர்ப்பிப்பதும்
- ❖ வரவுசெலவுத் திட்டத்தை தயார் செய்தல், வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு
- ❖ இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பற்றி அறிவுறுத்துவதும் அவற்றை ஏற்புடையதாக்கிக்கொள்வதும்.
- ❖ காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்களைத் தயார் செய்தல்.
- ❖ இலங்கையின் கணக்காய்வும் கணக்காய்வு நியமங்களும் பற்றி அறிவுறுத்தல்.
- ❖ உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் பற்றி அறிவுறுத்தல்.
- ❖ உள்ளூராட்சி நிதி முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா பாடநெறியை நடாத்தல்.
- ❖ பின்னடைவான உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வது தொடர்பான தொழில்சார் பயிற்சிகள்.

- ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட தொகை

  (இலங்கை ரூபா. 000) – ரூபா 3338/-

- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் – 113

- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் – 134%

| **வரவு செலவுத் திட்டக் குறியீடு** | **நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு** | **வரவுசெலவுத் திட்டத்திற்கமைவான நாட்களின் எண்ணிக்கை** | **உண்மையான நாட்களின் எண்ணிக்கை** | **வரவுசெலவுத் திட்டத்தின் படியான செலவினம்** | **உண்மைச் செலவினம்** |
|---|---|---|---|---|---|
| FM-01 | உள்ளூராட்சி நிதி முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா பாடநெறி | 48 | 58 | 960,000.00 | 1,661,540.30 |
| FM-02 | உள்ளூராட்சி கணக்கீட்டுக் கட்டமைப்பு, அரசதுறையின் கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு உள்ளூராட்சி மன்றங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் சமர்ப்பித்தல் பற்றிய சான்றிதழ் பாடநெறி | 20 | 20 | 900,000.00 | 1,122,345.80 |
| FM-03 | 2013 ஆம் ஆண்டுக்கு நிதிக்கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் பின்னடைவான உள்ளூராட்சி மன்றங்களுக்கு தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், | 10 | 10 | 140,000.00 | 140,400.00 |
| FM-04 | உள்ளூராட்சி மன்றங்களுக்கு வடாந்த வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்தல் | | 21 | 500,000.00 | 336,521.00 |
| | உள்ளூராட்சி தொடர்பான உயர் டிப்ளோமா பாடநெறி – நிதி முகாமைத்துவ மாதிரியமைப்பு | | 04 | | 77,723.00 |
| | **மொத்தம்** | **78** | **113** | **2,500,000.00** | **3,338,530.10** |

## 7.6 சட்டம் மற்றும் சட்டவாக்க அலுவல்கள் பிரிவு

இலங்கையின் உப தேசிய மட்டத்திலான நிருவாக மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களின் சட்டவாக்க ஆற்றல்களை வலுவூட்டுவதற்காக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் சட்டம் மற்றும் சட்டவாக்க அலுவல்கள் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது, நாட்டின் உபதேசிய மட்டமானது, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கியிருப்பதுடன், அவை தொடர்பான நிருவாக சட்ட ஏற்பாடுகள் மூலம் அந்நிறுவனங்களுக்கு சட்டரீதியான தத்துவங்கள் அளிக்கப்பட்டுள்ளன. எனவே மேற்படி நிறுவகங்களின் ஒழுங்கமைப்பு, கூட்டிணைத்தல், அதிகாரங்கள் மற்றும் பணிகள் போன்றன சட்டவாக்க அடிப்படையில் அமைந்துள்ளன. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் அவற்றில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்கு உதவிச் சட்டங்களையும், சட்டங்களையும் வரைவு செய்தல், மீளாய்வு செய்தல், தத்துவமுள்ளதாக்கல், அங்கீகரித்தல் போன்றவற்றுக்கான சட்டவாக்க ஆற்றல்கள் மற்றும் நாளாந்த வாழ்க்கையின் நடவடிக்கைகள் தொடர்பாக அமுலிலுள்ள சட்டங்களை ஏற்புடையதாக்கிக் கொள்வது தொடர்பான ஆற்றல்கள் பலவீனமான மட்டத்தில் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. பரந்தளவில் காணப்படுகின்ற சட்டரீதியான சிக்கல்கள், முறைகேடுகள், குறைப்பயன்பாடுகள் மற்றும் சட்ட மீறல்களை எதிர்நோக்குவதற்கு மாகாண சபைகளுக்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இது காரணமாக அமைகின்ற பாரிய குறைபாடாக இனங்காணப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைளில் காணப்படுகின்ற நிலைமை, பயிற்சித் தேவைகள் மற்றும் அவசியத்தன்மைகளை இனங்கண்டு, மதிப்பீடு செய்த பின்னர் அவை தொடர்பாக பயன்மிக்கவாறு செயற்படும் நோக்கத்துடன் சட்டம் மற்றும் சட்டவாக்க அலுவல்கள் பிரிவின் நிகழ்ச்சித்திட்டங்கள் விசேடமாக திட்டமிடப்பட்டுள்ளன. மேலும் நாட்டின் பொதுச் சட்டம் தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படுகின்ற குறைவான அறிவு மட்டத்துக்கு தீர்வு வழங்குவதை நோக்காகக் கொண்டு அரசியலமைப்பு, துணைச்சட்டங்கள், நிருவாக சட்டம், நீதிமன்ற நடைமுறைகள், உள்ளூராட்சி மன்றங்களின் அவை நடவடிக்கைகள் போன்றன தொடர்பாக கவனம் செலுத்தும் வகையில் “உள்ளூராட்சி சட்டம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி” எனும் புதிய பாடநெறியும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் சட்டவாக்க ஆற்றல்களை வலுவூட்டுகின்ற பொதுவான குறிக்கோள் தொடர்பாக கவனம் செலுத்தி பின்வரும் விசேட குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கும் இப்பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

- ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட தொகை

  (இலங்கை ரூபா. 000) – ரூபா 2,371/-

- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் – 40

- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் – 95%

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | வரவுசெலவுத் திட்டத்திற்கமைவான நாட்களின் எண்ணிக்கை | உண்மையான நாட்களின் எண்ணிக்கை | வரவுசெலவுத் திட்டத்தின் படியான செலவினம் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| LD/01 | துணைச் சட்டங்களை தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்துவது பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 | 12 | 400,000.00 | 793,516.00 |
| LD/02 | வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் ஏனைய அறிவித்தல்களை சரியாக வெளியிடுவது மற்றும் மீளாய்வு பற்றிய நடாத்தப்பட்ட பிராந்திய கருத்தரங்கு | 15 | 04 | 600,000.00 | 267,862.00 |
| LD/03 | உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிருவாகச் சட்டம், மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்டங்கள் பற்றிய அறிமுகம் | 12 | 02 | 480,000.00 | 105,609.00 |
| LD/04 | மாகாண சபைகளின் சட்ட வரைவு மற்றும் அமுல்படுத்தல் பற்றி நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 | 06 | 400,000.00 | 266,876.00 |
| LD/05 | உள்ளூராட்சி மன்றங்களின் ஒப்பந்த நடைமுறை | 12 | 12 | 480,000.00 | 666,079.00 |
| LD/06 | உள்ளூராட்சி மன்றங்களின் நீதிமன்றச் செயன்முறை | 04 | 04 | 140,000.00 | 271,190.00 |
| | **மொத்தம்** | **63** | **40** | **2,500,000.00** | **2,371,132.00** |

## 7.8 மாகாண மட்டத்திலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

முகாமைத்துவ அபிவிருத்தி அலகுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர்களின் உதவியுடன் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பயிற்சித் தேவைகள் பற்றிய மதிப்பீடுகளின் அடிப்படையில் முகாமைத்துவ அபிவிருத்தி அலகுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர்கள் ஊடாக மாகாண மட்டப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதானமாக நடாத்தப்படுகின்றன. இம்மாகாண மட்டப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதிசார் உதவிகள் நிறுவகத்தினால் வழங்கப்படுகின்றன.

- ஒதுக்கப்பட்ட தொகை (இலங்கை ரூபா. 000) – ரூபா 800/-
- ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட தொகை – ரூபா 781/-
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் – 22

| | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | நாட்களின் எண்ணிக்கை | உண்மையான செலவினம் |
|---|---|---|---|
| 01 | உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 12 | 84,610.00 |
| 02 | உள்ளூராட்சி மன்றங்களுக்கு தரவுகளைக் களஞ்சியப்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 02 | 426,880.50 |
| 03 | செயலாளர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களுக்காக நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 06 | 170,430.00 |
| 04 | உள்ளூராட்சி மன்றங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவது தொடர்பாக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 02 | 99,163.00 |
| | **மொத்தம்** | **22** | **781,083.50** |

குறிப்பு : **பயிற்சிப் பிரிவு** 2013 **ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து செயற்படுத்தப்பட்டதன் காரணமாக திறன்விருத்தி மற்றும் பௌதீக திட்டமிடல் அலகுகளிலிருந்து ரூபா** 700,000 **இப்பிரிவுக்கு மாற்றப்பட்டது. ஒரு சில நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உள்ளூராட்சி**, **மாகாண சபைகள் அமைச்சின் பங்களிப்பும் கிடைத்தது.**

## 7.7 இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் செயலாற்றுகையை மேம்படுத்தல்

கடந்த ஆறு வருட காலப்பகுதிக்குள் பல்வேறு கட்டங்களைக் கடந்து இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள செயலாற்றுகையின் பயணப் பாதை பற்றி பின்னாய்வு செய்து அவற்றிலுள்ள விசேடமான நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பணிக்கு வழிகாட்டுவதற்கு மேற்படி முயற்சிகளின் பெறுபேறுகளைப் பயன்படுத்துவது முக்கியமானதாகும். மேலும் குறித்த இலக்குகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிறுவனம் ஏற்படுத்தியுள்ள அழுத்தங்கள் மற்றும் வழிகாட்டல்கள் யாவை என்பது பற்றி மதிப்பீடு செய்வதும் அவசியமானதாகும். தனிமைப்படாது நிறுவனத்தின் செயற்பணிகளை நிறைவேற்றுவதற்கு இதன் போது எதிர்பார்க்கப்பட்டது.

- ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட தொகை
  (இலங்கை ரூபா. 000) – ரூபா 3711
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் –
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் – 132%

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | வரவுசெலவுத் திட்டத்தின் படியான செலவினம் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| CB/01 | நிறுவகத்தின் அலுவலர்களது திறன்களை மேம்படுத்தல் (உள்நாடு, வெளிநாடு) | 250,000.00 | 116,074.25 |
| CB/02 | சர்வதேச அமைப்புகளுடனான வலையமைப்பு மற்றும் அங்கத்துவக் கட்டணம் | 150,000.00 | 108,900.00 |
| CB/03 | கண்காட்சிகள், தேசிய மற்றும் சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்கள் மாநாடுகளை நடாத்தல் | 350,000.00 | 504,647.30 |
| CB/04 | இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தை மீளமைத்தல் | 200,000.00 | |
| CB/05 | தேசிய மட்டத்திலான வைபவங்கள் மற்றும் அங்குரார்ப்பண நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகள் | 200,000.00 | - |
| CB/06 | தேசிய டிப்ளோமாவுக்கான வசதிகளை செய்து கொடுத்தல் | 750,000.00 | 2,272,315.10 |
| CB/07 | தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பாடநெறிக்கு வழங்கிய நிவாரணம் | 700,000.00 | 709,648.65 |
| CB/08 | நூலகத்துக்கு வழங்கிய நிவாரணம் | பயிற்சிப் பிரிவுக்கு மாற்றப்பட்டது | - |
| CB/09 | அமைச்சினால் அளிக்கப்படுகின்ற விசேட பணிகள் | 200,000.00 | - |
| CB/10 | பல்வேறு செயற்பாடுகள் | பயிற்சிப் பிரிவுக்கு மாற்றப்பட்டது | -- |
| | **மொத்தம்** | **2,800,000.00** | **3,711,585.30** |

குறிப்பு : - CB/06 தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு வழங்கிய நிவாரணமானது, சுயமாக உருவாக்கிக் கொண்ட நிதியைப் பயன்படுத்தி வழங்கப்பட்டது.

## 7.10 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் துறையை வலுவூட்டுவதற்காக கொள்கை வகுப்பாளர்களுக்குத் தேவையான தகவல்கள் மற்றும் பெறுபேறுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகள் மூலம் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பிரிவு கவனம் செலுத்துகின்றது. அத்துடன் தமது ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடிக்கப்படுகின்ற விடயங்களின் அடிப்படையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏற்புடைய நடவடிக்கைகளிலும் இப்பிரிவு ஈடுபட்டு வருகின்றது.
குறிக்கோள்கள் :

- ❖ உரிய கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அமுல்படுத்தும் நிறுவனங்களுக்கு மத்தியில் ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களைப் பகிர்ந்தளித்தல்.
- ❖ நிருவாகம் தொடர்பாக தேசிய மட்ட மற்றும் சர்வதேச மட்டத்திலான ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவருதல்.
- ❖ புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வது அவசியமாவுள்ள முக்கிய பிரிவுகளை இனங்காணல்.
- ❖ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான தரவுக் கட்டமைப்பைப் பேணிவருதல்.
- ❖ ஆராய்ச்சிக்காக ஏற்படுத்தப்படுகின்ற முடிவுகளை ஆவணமயப்படுத்தல்.
- ❖ உள்ளூராட்சி, மாகாண சபைகள் தொடர்பான ஆவணங்களை வெளியிடல்.
- ❖ தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளின் ஏற்புடைய அலுவலர்களுக்கு ஆராய்ச்சி முறையியல் பற்றிய பாடநெறியை நடாத்தல்.
- ❖ ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்படுகின்ற விடயங்களின் அடிப்படையில் அபிவிருத்தி தொடர்பான சிக்கல்கள் சம்பந்தமாக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் அவற்றில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சியை பெற்றுக் கொடுத்தல்.

- ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட தொகை (இ.ரூபா. 000) –ரூபா 2318
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் – 09
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் – 93%

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | வரவுசெலவுத் திட்டத்திற்கமைவான நாட்களின் எண்ணிக்கை | உண்மையான நாட்களின் எண்ணிக்கை | வரவுசெலவுத் திட்டத்தின் படியான செலவினம் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| RD/01 | மாகாண சபைகள் ஊடாக சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய ஆராய்ச்சிக் கற்கை | 01 | 01 | 700,000.00 | 300,000.00 |
| RD/02 | வருமான உருவாக்க நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வருமான உருவாக்க செயற்பாடுகளிலுள்ள தடைகள் தொடர்பான ஆராய்ச்சிக் கற்கை | 01 | 01 | 750,000.00 | 598,130.25 |
| RD/P/03 | வருமானத்தை மேம்படுத்துவது பற்றி உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் | 08 | 07 | 700,000.00 | 645,737.00 |
| RD/P/04 | உள்ளூராட்சி மன்றங்களுக்கான தரவுக் கட்டமைப்பைத் தயார் செய்தல் | 01 | | 75,000.00 | 64,129.00 |
| RD/EF/01 | சிங்கள், தமிழ் மற்றும் ஆங்கில மொழியைப் பயன்படுத்தி தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள ஏற்புடைய அலுவலர்களுக்கு ஆராய்ச்சி முறையியல்கள் தொடர்பாக நடாத்தப்படுகின்ற சான்றிதழ் பாடநெறி | 03 | | 25,000.00 | 425,000.00 |
| **PCLA | மாகாண சபைகள் மட்டத்திலும், உள்ளூராட்சி மட்டத்திலும் நிறுவனங்களுக்கான ஒதுக்கங்கள் | | | 200,000.00 | - |
| | 2013 ஆம் ஆண்டுக்கான நின்ற செலவினம் | | | - | 285,000.00 |
| | **மொத்தம்** | **14** | **09** | **2,500,000.00** | **2,317,996.25** |

குறிப்பு

1 ஆராய்ச்சி முறையியல் தொடர்பான சான்றிதழ் பாடநெறியின் செலவினத்தை ஈடுசெய்து கொள்ளும் பொருட்டு செயல்ரீதியான திட்டத்தின் மூலம் ரூபா 25000 /- ஒதுக்கப்பட்டிருந்தது. பாடநெறியில் கலந்து கொண்டவர்களிடமிருந்து பாடநெறிக் கட்டணமாக ரூபா 525000/- இனை பெற்றுக் கொள்ள முடிந்ததுடன், வளவாளர்களுக்கான கட்டணம், கணணி உபயோகத்திற்கான (ஆய்வுகூட) செலவினம் மற்றும் பங்கேற்றவர்களுக்கு உணவும், குடிபானமும் வழங்கியமைக்கான செலவினமாக ரூபா 425000/- செலவாகியிருந்தது.

2 கடந்த ஆண்டின் (2012) ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை ஈடுசெய்யும் பொருட்டு ரூபா 285,000/- பயன்படுத்தப்பட்டது.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்

# 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள்

இல. 17, மலலசேகர மாவத்தை,
கொழும்பு – 07
தொலைபேசி : 011-2580307
பெக்ஸ் : 011-2580316
மின்னஞ்சல் : info@slilg.gov.lk
இணையத்தளம் : www.slilg.lk

உள்ளடக்கம்



| | | | பக்க இல. |
|---|---|---|---|
| | 1. | நிதிச் செயற்பாடுகள் பற்றிய கூற்று | |
| | 2. | நிதி நிலைமை பற்றிய கூற்று | |
| | 3. | திரண்ட காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று | |
| | 4. | தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய கூற்று | |
| | 5. | கணக்கீட்டுக் குறிப்புக்கள் | |
| | 6. | கணக்கீட்டுக் கொள்கைகள் | |
| | 7. | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(5)(பி) பிரிவின் பிரகாரம் கணக்குகளுடன் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கை | |



**இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின்**
***2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான***
***நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று***

| | *குறிப்புகள்* | *31/12/2013* | *31/12/2012* |
|---|---|---|---|
| ***செயற்பாட்டு வருமானம்*** | | | |
| *அரசாங்கத்தின் பங்களிப்பு/மீண்டெழுவன* | *01* | *42,078,600.00* | *36,119,000.00* |
| *வேறு வருமானங்கள்* | *02* | *9,433,325.00* | *15,049,008.03* |
| ***மொத்த செயற்பாட்டு வருமானம்*** | | ***51,511,925.25*** | ***51,168,008.03*** |
| | | | |
| ***செயற்பாட்டு செலவினம்*** | | | |
| *நிருவாக மற்றும் தாபன செலவினம்* | *03* | *27,114,697.69* | *25,479,268.92* |
| *மனித வள அபிவிருத்திச் செலவினம்* | *04* | *19,069,655.44* | *16,580,717.18* |
| *மதியுரைச் சேவைகளுக்கான செலவினம்* | *05* | *5,097,457.86* | *9,693,191.17* |
| *ஏற்பாடுகள்* | *06* | *8,805,137.47* | *2,882,188.22* |
| ***மொத்தச் செயற்பாட்டுச் செலவினம்*** | | ***60,086,948.46*** | ***54,635,365.49*** |
| ***ஆண்டுக்கான மிகை/ குறை*** | | ***(8,575,023.21)*** | ***(3,467,357.46)*** |

**இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின்**
**2013 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான**
**நிதி நிலைமை பற்றிய கூற்று**

| *சொத்துக்கள்* | *குறிப்பு* | 2013.12.31 | 2012.12.31 |
|---|---|---|---|
| *நடைமுறையல்லா சொத்துக்கள்* | | | |
| *ஆதனம், பொறி மற்றும் உபகணரம்* | *07* | *34,694,693.00* | *38,951,688.43* |
| | | ***34,694,693.00*** | ***38,951,688.43*** |
| *நடைமுறைச் சொத்துக்கள்* | | | |
| *இருப்பு* | *08* | *1,854,681.39* | *1,879,316.38* |
| *முற்பணச் செலுத்தல்களும் கிடைக்க வேண்டியவையும்* | *09* | *680,733.60* | *911,097.73* |
| *ஊழியர் கடன்பட்டோரும் முற்பணமும்* | *10* | *13,744,422.05* | *13,820,249.28* |
| *காசும் காசுக்குச் சம்மானவையும்* | *11* | *572,018.69* | *1,286,317.60* |
| | | 16,851,855.73 | ***17,896,980.99*** |
| *மொத்தச் சொத்துக்கள்* | | **51,546,548.73** | ***56,848,669.42*** |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | |
| *அரசாங்கத்தின் பங்களிப்பு - மூலதனம்* | | 45,885,495.41 | *41,885,195.41* |
| *திரண்ட நிதியம்* | | (3,462,299.98) | *5,112,723.23* |
| *ஐ.நா. அபிவிருத்தி கொடை* | | 714,658.79 | *714,658.79* |
| *கருத்திட்டப் பங்களிப்பு - மூலதனம்* | | 1,595,824.75 | *1,595,824.75* |
| *ஆசிய மன்றம் - கொடை* | | 291,000.00 | *291,000.00* |
| | | 45,024,378.97 | ***49,599,402.18*** |
| *நடைமுறையல்லாப் பொறுப்புகள்* | | | |
| *ஓய்வூதியப் பயன்களுக்கான கடப்பாடுகள்* | *12* | *3,690,570.50* | *3,154,603.50* |
| | | *3,690,570.50* | ***3,154,603.50*** |
| *நடைமுறைப் பொறுப்புக்கள்* | | | |
| *ஒதுக்கம் - கணக்காய்வுக் கட்டணம்* | | *500,000.00* | *400,000.00* |
| *கடன் கொடுத்தோரும் நின்ற செலவினமும்* | *13* | *2.331.599.26* | *3,694,663.74* |
| | | 2.831.599.26 | ***4,094,663.74*** |
| *மொத்தப் பொறுப்புக்கள்* | | 51.546.548.73 | ***6,848,669.42*** |
| | | | |

……………………………… ……………………………………

*கணக்காளர் - இ.உ.ஆ.நி.* *பணிப்பாளர் – இ.உ.ஆ.நி.*

**இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின்**
***2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான***
***திறண்ட காசுப் பாய்ச்சல் கூற்று***

| | | |
|---|---|---|
| | | ***31/12/2013*** |
| **நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| *சாதாரண நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த மிகை/ குறை* | | *(8,575,023.21)* |
| ***காசல்லாத செயற்பாடுகளுக்கான சீராக்கல்கள்*** | | |
| *தேய்மானம்* | | *8,169,170.47* |
| *பணிக்கொடை ஒதுக்கம்* | | *535,967.00* |
| *கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கம்* | | *100,000.00* |
| *முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்கள்* | | - |
| ***செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு மிகை/ குறை*** | | ***230,114.26*** |
| | | |
| *இருப்பு/கடன் பட்டோர்/ ஏனைய பெறுகைகள் (அதிகரிப்பு/ குறைவு)* | | *330,826.35* |
| *கடன் கொடுத்தோர்/ செலுத்த வேண்டியவை (அதிகரிப்பு/ குறைவு)* | | *(1,363,064.48)* |
| ***செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்*** | | ***(802,123.87)*** |
| | | |
| ***செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்*** | | ***(802,123.87)*** |
| | | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| *சொத்துக்கள் கொள்வனவு* | | *(3,912,175.04)* |
| ***முதலீடுட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்*** | | ***(3,912,175.04)*** |
| | | |
| **நிதிசார் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| *மூலதனக் கொடை* | | *4,000,000.00* |
| **நிதிசார் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | - |
| ***ஆண்டினுள் தேறிய மாற்றங்கள்*** | | ***(714,298.91)*** |
| | | |
| *ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சம்மானவையும்* | | *1,286,317.60* |
| *ஆண்டின் இறுதியில் காசும் காசுக்குச் சம்மானவையும்* | ***Note 'A'*** | ***572,018.69*** |
| ***<u>குறிப்பு ஏ</u>*** | | |
| ***வங்கியிலுள்ள காசு*** | | |
| *இலங்கை வங்கி க.இல. 2323344* | | *343,573.34* |
| *இலங்கை வங்கி க.இல. 2323350* | | *223,862.98* |
| *இலங்கை வங்கி சேமிப்பு க.இல. 2329975* | | *4,582.37* |
| | | ***572,018.69*** |

**இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின்**
**2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான**
**தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய கூற்று**

| *விபரம்* | *அரசாங்கத்தின் பங்களிப்பு* | *திரண்ட நிதியம்* | *ஐ.நா. அபிவிருத்தி நியத்தின் கொடை* | *கருத்திட்டப் பங்களிப்பு - மூலதனம்* | *ஆசிய மன்றக் கொடை* | *மொத்தம்* |
|---|---|---|---|---|---|---|
| | *ரூபா.* | *ரூபா.* | *ரூபா.* | *ரூபா.* | *ரூபா.* | *ரூபா.* |
| ***2013.01.01 ஆம் திகதிக்கான மீதி*** | ***41,885,195.41*** | ***5,112,723.23*** | ***714,658.79*** | ***1,595,824.75*** | ***291,000.00*** | ***49,599,402.18*** |
| *காலப்பகுதிக்கான மிகை/ குறை* | - | *(8,575,023.21)* | - | - | - | *(8,575,023.21)* |
| *குறித்த காலத்திற்கான மாற்றல்கள்* | *4,000,000.00* | - | - | - | - | *4,000,000.00* |
| *முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்கள்* | - | - | - | - | - | - |
| ***2013.12.31 ஆம் திகதிக்கான மீதி*** | ***45,885,195.41*** | ***(3,462,299.98)*** | ***714,658.79*** | ***1,595,824.75*** | ***291,000.00*** | ***45,024,378.97*** |

**இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின்**
**2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான**
**கணக்கீட்டுக் குறிப்புகள்**

| குறிப்பு 01 - அரசாங்கப் பங்களிப்பு - மீண்டெழுவன | | 31/12/2013 | 31/12/2012 |
|---|---|---|---|
| 2100 - 02 | பொதுத் திறைசேரி | 42,078,600.00 | 36,119,000.00 |
| | **மொத்தம்** | **42,078,600.00** | **36,119,000.00** |
| **குறிப்பு 02 - ஏனைய வருமானங்கள்** | | | |
| 1505 - 01 | பல்வேறு வருமானங்கள் | 35,750.00 | 76,768.32 |
| 1505 - 02 | ஊழியர் கடனுக்கான வட்டி | 520,255.03 | 420,301.02 |
| 1505 - 03 | வெளியீடுகளின் விற்பனை | 43,904.00 | 5,136.79 |
| 1505 - 05 | சேமிப்புகள் மற்றும் நிலையான வைப்பு வட்டி | 6,912.02 | 15,414.65 |
| 1505 – 07 | வாடகை வருமானம் | 8,000.00 | 540,832.00 |
| 2101 - 01 | கணினி பயன்பாடு பற்றிய சான்றிதழ் பாடநெறி | 520,000.00 | 467,500.00 |
| 2101 - 03 | UNDP - ஆற் கோல் கருத்திட்டம் | - | 1,282,140.00 |
| 2101 - 04 | முற்பணக் கணக்கு - பொது | 1,409,590.00 | 88,285.00 |
| 2101 - 05 | ஆசிய மன்றம் | - | 232,440.00 |
| 2010 - 7 | பாடசாலை ஒருங்கிணைப்பு, பரிமாற்ற முன்னெடுப்பகளுக்கு வசதி செய்தல் | 1,138,085.50 | - |
| 2101 - 10 | உள்ளூராட்சி பற்றிய டிப்ளோமா | 2,588,000.00 | 2,645,000.00 |
| 2101 - 13 | உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம் | - | 4,604,509.19 |
| 2101 - 15 | கிராமிய வீதிகளை விஸ்தரிக்கும் முன்னோடிக் கருத்திட்டம் | 2,932.828.70 | 5,135,050.00 |
| 2101 - 16 | உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம் கட்டம் 2 | 60.000.00 | - |
| 2101 - 17 | உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு – நிகழ்ச்சித்திட்ட முற்பணமம் | 170,000.00 | - |
| | **மொத்தம்** | **9,433,325.25** | **15,049,008.03** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ***குறிப்பு 03 - நிருவாக மற்றும் நிறுவன செலவினங்கள்*** | | | | | | |
| *1503 - 01 - 01* | *ஆளுக்குரிய வேதனாதிகள் - சம்பளமும் வேதனமும்* | | | *13,369,215.47* | | *13,660,211.21* |
| *1503 - 01 - 02* | *ஊழியர் சேமலாப நிதியம்* | | | *1,450,212.87* | | *1,499,998.33* |
| *1503 - 01 - 03* | *ஊழியர் நம்பிக்கை நிதியம்* | | | *361,561.71* | | *375,479.05* |
| *1503 - 01 - 04* | *விடுமுறை தின சம்பளமும் மேலதிக நேரமும்* | | | *686,584.95* | | *498,847.97* |
| *1503 - 01 - 05* | *ஏனைய கொடுப்பனவுகள்* | | | *337,566.00* | | *277,870.99* |
| *1503 - 02 - 01* | *பிரயாணச் செலவினம் - உள்நாடு* | | | *286,286.75* | | *276,325.00* |
| *1503 - 03 - 01* | *வழங்கள் - எழுது கருவி* | | | *1,927,809.26* | | *1,484,678.35* |
| *1503 - 03 - 02* | *வழங்கள் - எரிபொருள்* | | | *2,676,628.99* | | *2,132,518.81* |
| *1503 - 03 - 03* | *வழங்கள் - சீருடை* | | | *36,624.00* | | *32,608.00* |
| *1503 - 04 - 01* | *பராமரிப்புச் செலவினம் - வாகனம்* | | | *1,963,825.42* | | *1,405,180.68* |
| *1503 - 04 - 02* | *பராமரிப்புச் செலவினம் - இயந்திர சாதனங்கள்* | | | *304,962.30* | | *283,708.37* |
| *1503 - 04 - 03* | *பராமரிப்புச் செலவினம் - கட்டிடங்கள்* | | | *483,525.45* | | *440,980.14* |
| *1503 - 05 - 02* | *ஒப்பந்தச் சேவைகள் - தொலைபேசி* | | | *578,290.39* | | *597,607.91* |
| *1503 - 05 - 03* | *ஒப்பந்தச் சேவைகள் - தபால் கட்டணம்* | | | *65,956.50* | | *83,589.00* |
| *1503 - 05 - 04* | *ஒப்பந்தச் சேவைகள் - நீரும் மின்சாரமும்* | | | *1,158,312.88* | | *1,006,886.88* |
| *1503 - 05 - 05* | *ஒப்பந்தச் சேவைகள் - பத்திரிகைகளும் சஞ்சிகைகளும்* | | | *37,748.00* | | *39,000.00* |
| *1503 - 05 - 06* | *ஒப்பந்தச் சேவைகள் - பாதுகாப்புச் சேவை* | | | *659,613.54* | | *678,015.05* |
| *1503 - 05 - 07* | *ஒப்பந்தச் சேவைகள் - ஏனையவை* | | | *729,973.21* | | *546,031.08* |
| | ***மொத்தம்*** | | | ***27,114,697.69*** | | ***25,479,268.92*** |

| <u>***குறிப்பு 04 - மனித வள அபிவிருத்திச் செலவினம்***</u> | | | | | |
|---|---|---|---|---|---|
| ***2201 - 05 - 01*** | ***தேசிய மட்டத்திலான பயிற்சிப் பாடநெறி*** | | ***13,001,989.73*** | | ***11,000,684.96*** |
| *2201 - 05 - 01 - 01* | *மனித வளப் பிரிவு* | | - | | *2,332,565.59* |
| *2201 - 05 - 01 - 02* | *பொறியியல் பிரிவு* | | *1,649,334.87* | | *401,231.00* |
| *2201 - 05 - 01 - 03* | *பொது முகாமைத்துவப் பிரிவு* | | *3,212,545.44* | | *1,852,064.70* |
| *2201 - 05 - 01 - 04* | *பௌதீகத் திட்டமிடல் பிரிவு* | | *1,993,281.85* | | *1,598,391.30* |
| *2201 - 05 - 01 - 05* | *நிதி முகாமைத்துவப் பிரிவு* | | *3,338,530.10* | | *2,263,618.40* |
| *2201 - 05 - 01 - 06* | *சட்ட நடவடிக்கைகள் பிரிவு* | | *2,808,297.47* | | *2,552,813.97* |
| *2201 - 05 - 02* | *மாகாண மட்டத்திலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்* | | *849,411.50* | | *234,367.00* |
| *2201 - 05 - 03* | *நிறுவனத்தின் ஆற்றல் விருத்தி* | | *1,730,238.09* | | *2,591,848.35* |
| *2201 - 05 - 04* | *ஆரராய்ச்சி, நூலகம், வெளியீடுகள்* | | *2,561,985.12* | | *2,753,816.87* |
| *2201 - 05 - 05* | *கணனிச் சான்றிதழ் பாடநெறி* | | *926,031.00* | | - |
| | ***மொத்தம்*** | | ***9,069,655.44*** | | ***16,580,717.18*** |

| **குறிப்பு 05 - மதியுரைச் சேவைகளுக்கான செலவினம்** | | | |
|---|---|---|---|
| 1504 - 01 | இலங்கை உள்ளூராட்சி சம்மேளனம் | - | 2,000.00 |
| 1504 - 02 | முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - ஊவா மாகாணம் | - | 311,011.53 |
| 1504 - 03 | முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - தென் மாகாணம் | - | 41,140.00 |
| 1504 - 05 | பொதுச் செலவினக் கணக்கு | 1,271,219.29 | 1,569,361.25 |
| 1504 - 10 | உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம் | - | 750,000.00 |
| 1504 - 11 | உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம் II | - | 2,576,124.63 |
| 1504 – 13 | கிராமிய வீதிகளை விஸ்தரிக்கும் முன்னோடிக் கருத்திட்டம் | 2,964,187.07 | 4,443,553.76 |
| 1504 – 14 | பாடசாலை ஒருங்கிணைப்பு, பரிமாற்ற முன்னெடுப்பகளுக்கு வசதி செய்தல் | 862,051.50 | 4,443,553.76 |
| | **மொத்தம்** | **5,097,457.86** | **9,693,191.17** |

| **குறிப்பு 06 - ஒதுக்கங்கள்** | | | |
|---|---|---|---|
| 2102 - 03 | பணிக்கொடை கொடுப்பனவு ஒதுக்கம் | 535,967.00 | 610,000.00 |
| 2102 - 04 | கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கம் | 100,000.00 | 100,000.00 |
| 2105 - 02 | தேய்மானம் - இயந்திர சாதனங்களும் அலுவலக உபகரணங்களும | 1,382,842.47 | 1,237,722.34 |
| 2105 - 03 | தேய்மானம் - நூலகப் புத்தகங்கள் | - | 8,137.88 |
| 2105 - 04 | தேய்மானம் - மோட்டார் வாகனம் | 6,764,998.00 | 904,998.00 |
| 2106 - 03 | தேய்மானம் - தளபாடங்களும் உபகரணங்களும் | 21,330.00 | 21,330.00 |
| | **மொத்தம்** | **8,805,137.47** | **2,882,188.22** |

**இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின்**
**2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான**
**கணக்கீட்டுக் குறிப்புகள்**

| குறிப்பு 07 - ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபரகரணங்கள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | செலவினம் 01/01/2013 | கொள்வனவு 2013 | நீக்கப்பட்டவை 2013 | தேய்மானம் 2013 | திரண்ட தேய்மானம் | W.D.V. as at 31/12/2013 | W.D.V. as at 31/12/2012 |
| 2201 - 01 | வாகனம் | 33,824,990.00 | - | - | 6,764,998.00 | 7,806,917.33 | 26,018,072.67 | 32,783,070.67 |
| 2201 - 02 | இயந்திரமும் அலுவலக உபகரணமும் | 17,097,866.06 | 109,760.00 | - | 1,382,842.47 | 2,461,500.77 | 4,746,125.29 | 6,019,207.76 |
| 2201 - 03 | நூலகப் புத்தகங்கள் | 153,593.20 | 40,000.00 | - | - | 53,493.20 | 40,100.00 | 100.00 |
| 2201 - 04 - 01 | தளபாடமும் உபகரணங்களும் | 213,300.00 | - | - | 21,330.00 | 85,320.00 | 127,980.00 | 149,310.00 |
| 2201 - 05 - 06 | மூலதனச் செலவினம் – புதிய கட்டடம் | - | 3,762,415.04 | - | - | - | 3,762,415.04 | - |
| | மொத்தம் | **51,289,749.26** | **3,912,175.04** | **-** | **8,169,170.47** | **20,507,231.30** | **34,694,693.00** | **38,951,688.43** |

| | | | |
|---|---|---|---|
| **<u>குறிப்பு 08 - இருப்பு</u>** | | | |
| *2202 - 01* | *இருப்பு - எழுது கருவிகள்* | *317,743.39* | *342,378.38* |
| *2202 - 02* | *இருப்பு - வெளியீடுகள்* | *<u>1,536,938.00</u>* | *<u>1,536,938.00</u>* |
| | **மொத்தம்** | ***<u>1,854,681.39</u>*** | ***<u>1,879,316.38</u>*** |

| | | | |
|---|---|---|---|
| **<u>குறிப்பு 09 - முற்பணக் கொடுப்பனவுகளும் கிடைக்க வேண்டியவைகளும்</u>** | | | |
| *2206 - 01* | *முற்பணக் கொடுப்பனவு - காப்புறுதி* | *122,944.10* | - |
| *2206 - 02* | *முற்பணக் கொடுப்பனவு - வாடகையும் ஏனையவையும்* | *32,590.00* | *112,317.73* |
| *2206 - 05* | *கிடைக்கவேண்டிவை - உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு கிடைக்க வேண்டிய கணக்குகள்* | *525,199.50* | *798,780.00* |
| | **மொத்தம்** | ***<u>680,733.60</u>*** | ***<u>911,097.73</u>*** |

| | | | |
|---|---|---|---|
| **<u>குறிப்பு 10 - கடன்பட்டோரும் முற்பணங்களும்</u>** | | | |
| *2203 - 01* | *ஊழியர் கடன்பட்டோர்* | *30,707.42* | *31,942.02* |
| *2203 - 03* | *பல்வேறு கடன் பட்டோர்* | *27,218.65* | *32,218.65* |
| *2204 - 02* | *விசேட முற்பணம்* | *7,850.00* | *7,850.00* |
| *2204 - 04* | *உட்சவ முற்பணம்* | *45,800.00* | *38,300.00* |
| *2204 - 05* | *ஊழியர் கடன்* | *13,622,845.98* | *13,709,938.61* |
| *2205 - 01* | *அவசர கொள்வனவுகளுக்கான முற்பணம்* | *10,000.00* | |
| | **மொத்தம்** | ***<u>13,744,422.05</u>*** | ***<u>13,820,249.28</u>*** |

| குறிப்பு 11- காசும் காசுக்குச் சமமானவையும் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2207 - 02 | இலங்கை கணக்கு இல. 2323344 | | | 343.573.34 | | 77,551.26 |
| 2207 - 03 | இலங்கை கணக்கு இல. 2323350 | | | 223.862.98 | | 1,199,357.57 |
| 2207 - 04 | இலங்கை சேமிப்புக் கணக்கு இல.. 2329975 | | | 4.582.37 | | 9.408.77 |
| | **மொத்தம்** | | | **572.018.69** | | **1,286,317.60** |

| குறிப்பு 12 - ஒய்வூதியப் பயன்களுக்கான கடப்பாடுகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013.01.01 இல் மீதி | | | 3,154,603.50 | | 3,055,300.00 |
| | காலப்பகுதிக்கான ஒதுக்கங்கள் | | | 535,967.00 | | 610,000.00 |
| | செலுத்தப்பட்ட உண்மையான தொகை | | | - | | (510,696.50) |
| | **2011.12.31 இல் மீதி** | | | **3,690,570.50** | | **3,154,603.50** |

| குறிப்பு 13 - கடன் கொடுத்தோரும் நின்ற செலவினங்களும் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2103 - 01 | நின்ற செலவினங்கள் | | | 2,252,349.26 | | 2,267,867.19 |
| 2104 - 02 | கேள்வி வைப்புக்கள் | | | 79,250.00 | | 79,250.00 |
| 2104 - 03 | நிதிய முற்பணங்கள் முன்னராக கிடைத்தவை GIZ | | | - | | 1,347,546.55 |
| | **மொத்தம்** | | | **2,331,599.26** | | **3,694,663.74** |

## கணக்கீட்டுக் கொள்கைகள்

1. **பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்**

1.1 வரலற்றுக் கிரய அடிப்படையைப் பயன்படுத்தி பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு அமைவாக நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

1.2 அடிப்படை நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குகளில் தாக்கம் செலுத்துகின்ற பணவீக்கக் காரணிகள் தொடர்பான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

2. **சொத்துக்கள் மற்றும் அவற்றை விலைமதிப்புச் செய்யும் அடிப்படை**

2.1.1 நிலையான சொத்துக்கள் பொதுவாக விலைமதிப்புச் செய்யப்படுவது செவின அடிப்படையிலாகும்.

2.1.2 சில சொத்துக்கள் எவ்வித செலவையும் செய்யாது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் பொறுப்பளிக்கப்பட்டவையாகும். தற்போது காணப்படுகின்ற தகவல்களுக்கு அமைய மேற்படி சொத்துக்கள் 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவையாகும். எனவே அவற்றைப் பூரணமாக தேய்வு செய்யும் சொத்துக்களாகக் கருதுவதுடன், ஒன்று 100 ரூபா ஆன நிலுவைப் பெறுமதியைக் கொண்ட சொத்துக்களாக மேற்படி சொத்துக்களை அறிக்கைகளில் வெளிப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

2.1.3 மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் பொறுப்பளிக்கப்பட்ட விடயங்களில் ஒரு சில விடயங்களின் விலைகளைப் பொருப்படுத்தாதிருக்க முடியும். அவ்வாறான விடயங்களை விலைமதிப்புச் செய்யாது அளவுகளின் அடிப்படையில் பேணிவருவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

2.1.4 பொறுப்பேற்றுக் கொண்ட அல்லது கொள்வனவு செய்த வருடம் தொடர்பான தேய்மானம் செய்யப்படவில்லை.

2.1.5 ஒவ்வொரு சொத்துக்கும் நேர்கோட்டு முறையில் தேய்மானம் அறவிடப்படுகின்றது.

2.1.6 தேய்மானம் தொடர்பான விடயங்களுக்கு சொத்துக்களின் விளைதிறன்மிக்க ஆயுட்காலம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| சொத்துக்களின் வகை | ஆயுட் காலம் வருடங்களில் | தேய்மான விகிதம் |
|---|---|---|
| (அ) இயந்திர சாதனங்களும், அலுவலக உபகரணங்களும் | 10 | 10% |
| (ஆ) கணனியும், உதிரிபாகங்களும் | 5 | 20% |
| (இ) வாகனங்கள் | 5 | 20% |
| (ஈ) நூலகப் புத்தகங்கள் | 10 | 10% |

3. பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கங்கள்

7.1 பொருளாதாரப் பயன்கள்

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் கீழ் இறுதிப் பயன்களுக்காக கணக்குகளில் ரூபா 3,690,570.50 ஆன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், இத்தொகைள் ஐந்தொகையில் நடைமுறையல்லாப் பொறுப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

4. மூலதனச் செலவினம்

மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டிருப்பது நிறுவகத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக அல்லது நிறுவகத்தின் வருமான உருவாக்க ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்துடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள, நீடிக்கப்படுகின்ற அல்லது மேம்படுத்தப்படுகின்ற நிலையான தன்மையைக் கொண்டுள்ள சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களாகும்.

## 1971 இன் 31ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(5)(பி) பிரிவுக்கு அமைய கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கை

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| 1. | ஐந்தொகை<br>1.1. பௌதீக சொத்துக்கள் காணப்படுவதை உறுதிசெய்துகொள்ளல் (காணி, கட்டடம், பொறி, இயந்திரசாதனம், களஞ்சியம் போன்றன)<br>1. ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் பௌதீகச் சொத்துக்கள் காணப்படுகின்றதா என்பது பற்றி பௌதீக ரீதியாக உறுதி செய்யப்பட்டதா? | ஆம் | | |
| | 2. ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சொத்துக்கள் பௌதீக ரீதியாக உறுதி செய்யப்படவில்லையாயின் தொடர்ச்சியான அடிப்படையில் அல்லது வேறு அடிப்படையில் குறித்த சொத்துக்கள் உறுதிசெய்யப்பட்டனவா? | | | ஏற்படையதல்ல |
| | 3. புத்தகங்களில் உள்ள பெறுமதிகள், பௌதீக ரீதியாக உறுதிசெய்யப்பட்ட பெறுமதிகள் மற்றும் அவற்றுக்கிடையிலான வித்தியாசங்கள், மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்களின் மூலம் எழுந்த வித்தியாசங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்றவற்றைக் காட்டுகின்ற குறிப்புக்கள் கணக்காய்வுப் பரிசோதனைக்காக காணப்படுகின்றனவா? | | | பௌதீக ரீதியாக உறுதிசெய்து கொள்ளப்பட்டது |
| | 4. இணைப்பு 1இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பௌதீக ரீதியாக உறுதிசெய்துகொள்வது சம்பந்தமான நிலைமை பொழிப்பை சமர்ப்பிக்குக. இணைப்பு 1 இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது | | | நிலைமை பற்றிய பொழிப்பு சமர்ப்பிக்கப்பட்டது |
| | 1.2. நிதிச் சொத்துக்களை உறுதிசெய்து கொள்ளல் (வங்கி மீதி, சில்லறைக்காசு மீதி, கடன் பட்டோர், முற்பணம், வைப்புக்கள், முதலீடுகள் போன்றன)<br>1. ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் காணப்பட்ட நிதிசார் சொத்துக்களின் மீதிகளை உறுதிசெய்துகொள்ளுமாறு அவற்றின் பொறுப்பாளர்களிடம் கோரப்பட்டதா? | ஆம் | | |

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| | 1.3. ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் உறுதிப்படுத்தல்கள் கோரப்படவில்லையாயின் ஆண்டினுள் வேறு எந்தத் திகதியில் அவ்வாறு உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டுள்ளன. | | | ஏற்படையதல்ல |
| | 1. வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுப் பரிசோதனைக்காக காணப்படுகின்றனவா? | ஆம் | | |
| | 2. பொறுப்புக்களை உறுதிப்படுத்தல் (மூலதன மற்றும் நடமாடும் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக சகல பொறுப்புக்களும்)<br>3. ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பொறுப்புக்களை உறுதிப்படுத்துமாறு கோரப்படுகின்ற கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளனவா? | ஆம் | | |
| | 4. ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் உறுதிப்படுத்துமாறு கோரப்பட்ட கடிதங்கள் அனுப்பப்படவில்லையாயின் ஆண்டினுள் அதற்கு முன்னைய தினமொன்றில் அவ்வாறு செய்யப்பட்டதா? | | | ஏற்படையதன்று |
| | 5. கிடைத்த உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுப் பரிசோதனைக்காக உள்ளனவா? | ஆம் | | |
| | 1.4 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமான சட்ட நிலைமை<br>1. ஐந்தொகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள் நிறுவனத்திற்கு உரித்தான சொத்துக்களா? | ஆம் | | |
| | 2. ஐந்தொகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள யாதாயினும் ஒரு சொத்துரிமை தொடர்பான சட்ட ரீதியான நிலைமை தெளிவற்றதாக இருப்பின் அவ்வாறான சொத்துக்கள் பற்றிய தகவல்களை தனியான அட்டவணையாக சமர்ப்பிக்கவும் (அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது) | | | ஏற்புடையதன்று |
| | 3. ஐந்தொகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து சம்பந்தமாகவும் சட்ட ரீதியான பொறுப்பு காணப்படுகின்றதா? | ஆம் | | |
| | 4. யாதாயினும் பொறுப்பு சம்பந்தமான சட்ட நிலைமை தெளிவானதாக இல்லையாயின் குறித்த பொறுப்பு பற்றிய தகவல்கள் தனியொரு அட்டவணையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது. | | | ஏற்புடையதன்று |

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| | 5. சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் பற்றிய சட்ட ரீதியான நிலைமை தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் ஐந்தொகையில் வெளிப்படுத்தப்படாதுள்ள சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் காணப்படுகின்றனவா? அவ்வாறான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் காணப்படுமாயின் அவை பற்றிய தகவல்களை தனியொரு அட்டவணையாக சமர்ப்பிக்கவும். அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது. | | இல்லை | |
| | 1.5 சொத்துக்களை விலைமதிப்பு செய்தல்<br>1. நிலையான சொத்துக்கள், இருப்பு போன்றவற்றை விலைமதிப்பு செய்வது சம்பந்தமான விபரங்களைக் கொண்ட கூற்று 2ஆம் இணைப்பில் காப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துக்கமைய தயார் செய்யப்படல் வேண்டும். ஏற்புடைய கூற்றுக்கள் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | | விலைமதிப்பு கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன |
| | 2. முன்னைய ஆண்டில் விலைமதிப்புக்காக பின்பற்றப்பட்ட அடிப்படையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த ஆண்டில் யாதாயினும் ஒரு சொத்தின் பெறுமதியை விலைமதிப்பு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட அடிப்படை யாதாயினும் ஒரு வகையில் மாற்றமடைந்துள்ளதா? | | இல்லை | |
| | 3. அவ்வாறு சொத்துக்களை விலைமதிப்புச் செய்கின்ற அடிப்படைய யாதாவதொரு வகையில் மாற்றப்பட்டிருப்பின் குறித்த சொத்துக்கள் பற்றி அவற்றில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் சம்பந்தமாகவும் இங்கு இணைப்பு 3இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும். 3வது மாதிரிப் படிவம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. | | | ஏற்புடையதன்று |
| | 4. சொத்துக்களை விலைமதிப்புச் செய்யும்போது பின்வரும் கட்டணங்கள் அவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா?<br>(அ) நிதிக்கட்டணங்கள்<br>(ஆ) FEEC | | இல்லை | |
| | 5. யாதாயினும் ஒரு சொத்தை விலைமதிப்புச் செய்யும்போது ஏதேனும் ஒரு வகையில் பங்கீட்டு அடிப்படையின் கீழ் மறைமுக செலவினக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளதா? | | இல்லை | |

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| | 6. யாதாயினும் ஒரு சொத்தின் பெறுமதி விலைமதிப்புச் செய்யப்பட்டிருப்பின் அவ்வாறான சொத்துக்களின் விபரங்கள், விலைமதிப்புச் செய்யப்பட வேண்டிய அடிப்படை மற்றும் அவ்வாறு செய்வதற்கான காரணங்கள் தனியான அட்டவணையாக சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறான அட்டவணையொன்று இணைக்கப்பட்டுள்ளது. | | | ஏற்புடையதன்று |
| | 7. பூர்த்தி செய்யப்படாத வேலைகள் உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதா? | | | ஏற்புடையதன்று |
| | 8. ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்ட யாதாயினும் ஒரு முற்பணம் குறித்த பணியை சான்றுப்படுத்தாது பூர்த்தி செய்யப்பட்ட வேலையாகக் கருதப்பட்டுள்ளதா? | | இல்லை | |
| | 9. ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய, தடுத்து வைக்கப்பட்டுள்ள தொகைகள் அனைத்தும் பொறுப்புக்களின் கீழ் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா? | | | ஏற்புடையதன்று |
| | 1.6 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகளை விலைமதிப்புச் செய்வதும் கணிப்பிடுவதும்.<br>1. முன்னைய ஆண்டில் பின்பற்றியதன் அடிப்படையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த ஆண்டில் தேய்மானம், அறவிட முடியாக்கடன், காலம் கடந்துள்ளமை போன்றவற்றுக்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் உள்ளடங்கலாக யாதாயினும் ஒரு பொறுப்பு அல்லது ஏற்பாட்டை கணிப்பிடுவதற்கு அல்லது மதிப்பீடு செய்வதற்காக பயன்படுத்திய அடிப்படையில் ஏதும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றதா? | | இல்லை | |
| | 2. இங்கு 4ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி அமைப்பை பயன்படுத்தி பொறுப்புக்கள், ஏற்பாடுகள் போன்றவற்றை கணிப்பிடுவது மற்றும் விலைமதிப்புச் செய்வதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்கவும் பூர்த்தி செய்யப்பட்ட 4வது இணைப்பு இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. | | | ஏற்புடையதன்று |
| | 1.7 பரீட்சைமீதி<br>5. பரீட்சை மீதி சமன்செய்யப்படாதிருப்பின் அதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மாற்றம் யாது? | | | பரிட்சைமீதி சமப்படுத்தப்பட்டுள்ளது |

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| | 1.8 கட்டுப்பாட்டுக்கணக்குகள்<br>1. பேணிவரப்படுகின்ற கட்டுப்பாட்டுக் கணக்குகளின் நிலுவைகள் மற்றும் விரிவாக நிர்வகிக்கப்பட்ட பேரேட்டு மீதிகளுக்கிடையே யாதாயினும் மாற்றங்கள் இருப்பின் அவை பற்றிய தகவல்கள் இதன் 5ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி சமர்ப்பிக்கவும் | | | ஏற்புடையதன்று |
| | 1.9 வங்கி இணக்கக்கூற்று<br>1. ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை வங்கி இணக்கக்கூற்று தயார் செய்யப்பட்டுள்ளதா? | ஆம் | | |
| | 2. இணக்கக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காசுப்புத்தகத்தின் மீதியைப் பெற்றுக்கொள்வதற்காக வங்கியுடன் நேரடியாக மேற்கொள்ளப்பட்டுள்ள சகல வரவு மற்றும் செலவுகளும் காசுப்புத்தகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனவா? | ஆம் | | |
| | 3. ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படுகின்ற வங்கியினால் வரவு வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகள் உள்ளனவா? | | இல்லை | |
| | 4. காசுப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் வங்கியினால் செலவு வைக்கப்படாதுள்ள நிலுவைத் தொகைகள் காணபபடுகின்றனவா? | | இல்லை | |
| | 5. மேலே 3 மற்றும் 4இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரவு மற்றும் செலவு தொடர்பான தகவல்கள் தனியொரு அட்டவணையாக சமர்ப்பிக்க வேண்டும். இதனுடன் மேற்படி அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | | ஏற்புடையதன்று |
| | 1.10 தொங்கல் கணக்கு<br>1. இணக்கம் செய்தல் மற்றும் தீர்த்து வைப்பதை எதிர்பார்த்துக் காணப்படுகின்ற இனங்காணப்படாத விடயங்களுக்கான வாய்ப்புக்களை உள்ளடக்கியுள்ள வரவுக் கணக்குகள் அல்லது செலவுக்கணக்குகள் காணப்படுகின்றனவா? இங்கே காணப்படுகின்ற 6ஆம் இலக்க இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி அவ்வாறான கணக்குகள் பற்றிய விபரங்களை வழங்குக. 6ஆம் இணைப்பு முறையாகப் பூர்த்தி செய்து இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. | | இல்லை | |

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| 2. | **சந்தைப்படுத்தல், உற்பத்தி இலாபம் மற்றும் நட்டம் சம்பந்தமான கணக்குகள்** | | | |
| | 2.1 கணக்குகளுக்கான அடிப்படை<br>1. சகல அறவீடுகளின் வருமானங்கள் என்பன நின்ற அடிப்படையில் கருதப்பட்டுள்ளனவா? | ஆம் | | |
| | 2. சகல செலவினங்களும் நின்ற அடிப்படையில் கருதப்பட்டுள்ளனவா? | ஆம் | | |
| | 3. யாதாயினும் ஒரு வருமானம் அல்லது செலவின விடயம் நின்ற அடிப்படையில் கணிப்பிடப்பட்டில்லையாயின் மேற்படி விடயம் சம்பந்தமான விபரங்கள் மற்றும் அவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான காரணங்களை தனியொரு அட்டவணையின் மூலம் சமர்ப்பிக்கவும் அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | | | ஏற்புடையதன்று |
| | 4. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டுக்கான வருமானம் மற்றும் செலவினங்கள் கணக்குகளின் அடிப்படையில் யாதாயினும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா? | | இல்லை | |
| | 5. கணக்கீட்டு அடிப்படையில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பின் அவ்வாறான மாற்றங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் ஆண்டின் நிதிப்பெறுபேறுகளில் அந்த மாற்றங்களின் காரணமாக ஏற்பட்டுள்ள தாக்கங்களை இந்த இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி சமர்ப்பிக்கவும். குறித்த மாதிரிப்படிவம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது | | | ஏற்புடையதன்று |
| | 2.2 வருமான செலவினங்களுக்கிடையிலான சீராக்கல்கள்<br>1. வருமானத்தை உழைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சகல செலவவினங்களும் வருமானத்தில் இருந்து குறைக்கப்பட்டுள்ளனவா? | ஆம் | | |
| | 2. செலவினங்களில் யாதாயினும் ஒரு விடயம் கைவிடப்பட்டுள்ளதா? | | இல்லை | |
| | 3. வருமானங்களில் ஏதாவது ஒன்று விடுபட்டுள்ளதா? | | இல்லை | |
| | 4. யாதாயினும் ஒரு வருமானம் அல்லது செலவின விடயம் விடுபட்டிருப்பின் அந்த விடயம் சம்பந்தமான விபரங்கள் மற்றும் அவ்வாறு ஏற்படுவதற்கான காரணங்களை தனியொரு அட்டவணையாக | | இல்லை | |

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கவும். அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது | | | |
| | 2.3 விசேட விடயங்கள்<br>1. அசாதாரணமான அல்லது விசேடமான மீண்டும் ஏற்படாதவகையிலான வருமான விடயங்கள் உள்ளனவா? அவ்வாறான விடயங்களின் கூட்டுத்தொகை என்ன? | | இல்லை | |
| | 2. அசாதாரணமான அல்லது விசேடமான மீண்டும் மீண்டும் ஏற்படாத வகையிலான யாதாயினும் ஒரு செலவின விடயம் உள்ளதா? அவ்வாறானவற்றின் கூட்டுத்தொகை யாது? | | | ஏற்புடையதன்று |
| | 3. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விசேட விடயத்தை மாத்திரம் கருத்தில் கொள்ளும்போது மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அது சம்பந்தமான இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு? | | | ஏற்புடையதன்று |
| | 2.4 மதிப்பீடும், பங்கீடும்<br>1. யாதாயினும் ஒரு வருமானம் அல்லது செலவின விடயம் அல்லது அவற்றின் ஏதேனும் ஒரு பகுதி மதிப்பீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? | | இல்லை | |
| | 2. யாதாயினும் ஒரு வருமானம் அல்லது செலவின விடயம் வேறு கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட சாட்டுதல்கள் அல்லது வேறேதேனும் பங்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சாட்டுதல்களை உள்ளடக்கியிருக்கின்றதா? | | இல்லை | |
| | 3. மதிப்பீடுகள் அல்லது பங்கீடுகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் இருப்பின் அவ்வாறான மதிப்பீடுகள் அல்லது பங்கீடுகள் பற்றிய விபரங்கள் மதிப்பீடுகள் மற்றும் பங்கீடுகளை மேற்கொள்வதற்கான காரணங்கள், மதிப்பீடுகள் மற்றும் பங்கீடுகளுக்கான அடிப்படை தகவல்கள் தனியொரு அட்டவணையாகக் குறிப்பிடப்பட வேண்டும். அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது. | | | ஏற்புடையதன்று |
| | 2.5 மூலதனம் மற்றும் மிகை கட்டண செலவினம்<br>1. வருமானத்தில் இருந்து குறைக்கப்பட்டுள்ள செலவினங்களில் கணக்கீட்டுக் காலப்பகுதிக்கும் அப்பால் செல்லும் ஆயுட்காலத்தைக்கொண்ட யாதாயினும் ஒரு விடயம் அல்லது பயன் உள்ளடக்கப்பட்டுள்ளதா? | | இல்லை | |

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| | 2. நிதியீட்டல் கட்டணம் உள்ளடங்கலாக இருப்பு, களஞ்சியம் அல்லது நிலையான சொத்துக்களுடன் நேரடியாக சம்பந்தப்படுகின்ற யாதாயினும் ஒரு செலவினமாக மேற்படி குறித்த சொத்தின் செலவினத்தில் உள்ளடக்கப்படாத இலாபநட்டக் கணக்கில் இருந்து வேறு அறவிட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றதா? | | இல்லை | |
| | 3. நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வது சம்பந்தமான வட்டி, ஏற்பாடுகள், கழிவு மற்றும் நிதிக்கட்டணங்கள் இலாபநட்டக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளதா ? | | இல்லை | |
| | 2.6 இலாபம், நட்ட விடயங்களிலான மாற்றங்கள்<br>1. இங்கு 9ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இலாபநட்டக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் உள்ள மாற்றங்கள் சம்பந்தமான விபரங்களை சமர்ப்பிக்கவும். உரியவாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ள இணைப்பு இலக்கம் 9 இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | | | உரியவாறு பூர்த்தி செய்யப்பட்டு இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது |
| | 2.7 ஒதுக்கீடு<br>1. முன்னைய ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை இலாப ஒதுக்கீடு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவானதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதா? | ஆம் | | |
| | 2. இந்த ஆண்டில் ஒதுக்கீட்டிற்காக உத்தேசிக்கப்பட்ட இலாபத்தொகை சட்டத்தின் குறித்த ஏற்பாடுகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்டுள்ளதா? | ஆம் | | |
| | 3. 1971 இன் 37 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மிகை ஒதுக்கீடுகளை அங்கீகரிப்பதற்காக உரிய அதிகாரங்கள் பொறுப்பளிக்கப்படுகின்ற அமைச்சுக்கு அது தொடர்பில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதா? | ஆம் | | |
| | 4. ஒதுக்கீட்டிற்காக காணப்படுகின்ற தேறிய மிகையை நிர்னயிக்கும்போது திரண்ட நிதியத்திற்கு வழங்கப்படுகின்ற கட்டாய பங்களிப்பு முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா? | | | ஏற்புடையதன்று |

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| | 2.8 வரவுசெலவுத்திட்டத்துடன் ஒப்பிடும்போது காணப்படுகின்ற மாற்றங்கள்<br>1. இதன் 10 ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தைப் பயன்படுத்தி தற்போதைய காலப்பகுதிக்குரிய கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கிடையே பாரிய வித்தியாசங்கள் காணப்படுமாயின் அவற்றை விளக்குக. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட மாதிரிப் படிவம் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>2. இதன் 10ஆம் இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி வரவு செலவுத்திட்டத்தின்படி பூர்த்தி செய்யப்படுபவற்றின் அளவு மற்றும் உண்மையாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ள அளவுக்குள்ளே காணப்படுகின்ற வித்தியாசங்களை விபரிக்கவும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மாதிரிப் படிவம் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | | ஏற்புடையதன்று |
| **3.** | நடவடிக்கைமுறை | | | |
| | 3.1 பின்வரும் விடயங்கள் தொடர்பாக எழுத்து மூலமான அறிவுரைகள் அல்லது கைநூல்கள் தயார்செய்யப்பட்டுள்ளனவா?<br>(அ) கொள்வனவு<br>(ஆ) விற்பனை<br>(இ) பற்றுச்சீட்டு<br>(ஈ) கொடுப்பனவு<br>(உ) இருப்பு பதிவேட்டுக் கட்டுப்பாடு<br>(ஊ) வரவு செலவுத்திட்டமிடல்<br>(எ) மூலதன செலவினக் கட்டப்பாடு<br>(ஏ) சொத்துக்களின் பாதுகாப்பும் பராமரிப்பும்<br>(ஒ) ஊழியர் சம்பளப் பட்டியல்<br>(ஓ) அந்நியச் செலாவணி ஒதுக்கம்<br>(ஔ) FEEC | ஆம்<br>ஆம்<br>ஆம்<br>ஆம்<br>ஆம்<br>ஆம்<br>ஆம்<br>ஆம்<br>ஆம்<br>ஆம்<br>ஆம்<br>ஆம்<br>ஆம்<br>ஆம்<br>ஆம் | | ஏற்புடையதன்று |
| | 2. பின்வரும் விடயங்கள் தொடர்பான பொதுப் பேரேட்டின் கட்டுப்பாட்டுக் கணக்குகள் பேணிவரப்பட்டுள்ளனவா?<br>(அ) நிலையான சொத்துக்கள் | | | ஏற்புடையதன்று |

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| | (ஆ) இருப்பு | ஆம் | | |
| | (இ) விற்பனைக் கடன்பட்டோர் | ஆம் | | |
| | (ஈ) பதவியணி கடன்பட்டோர் | ஆம் | | |
| | (உ) விற்பனைக் கடன்கொடுத்தோர் | ஆம் | | |
| | (ஊ) கிடைக்க வேண்டிய வைப்புக்கள் | ஆம் | | |
| | (எ) செலுத்த வேண்டிய வைப்புக்கள் | ஆம் | | |
| | (ஏ) வேறு (விபரத்துடன்) | ஆம் | | |
| | 3. உள்ளகக் கணக்காய்வொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதா? | ஆம் | | |
| | 4. விற்பனைக் கட்டளைகள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், விற்பனை பற்றுச்சீட்டு, பொருட்களின் பற்றுச்சீட்டுக்கள், பொருட்களை வெளியிடுவதற்கான கட்டளைகள் போன்ற முக்கியமான கணக்கு குறிப்புக்களுக்கான உறுதி ஆவணங்கள் அனைத்தும் எண்ணிக்கை அடிப்படையில் கட்டுப்பாட்டின்கீழ் காணப்படுகின்றனவா? | ஆம் | | |
| **4.** | சட்டங்கள், ஒழுங்கு விதிகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் | | | |
| | 1. சமர்ப்பிக்க வேண்டிய சகல வருமான வரி மீளச்செலுத்தல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா? | | | ஏற்புடையதன்று |
| | 2. செலுத்த வேண்டிய நிலுவை வருமான வரிகள் உள்ளனவா? | | | ஏற்புடையதன்று |
| | 3. வியாபாரப் புரல்வு வரி உரிய நேரத்தில் செலுத்தப்பட்டுள்ளதா? | | | ஏற்புடையதன்று |
| | 4. உள்நாட்டு இறைவரி செலுத்த தவறுவது சம்பந்தமாக தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதா? | | | ஏற்புடையதன்று |
| | 5. கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? | ஆம் | | |
| | 6. அந்நியச் செலாவணி சம்பந்தமான உடன்படிக்ககைகளைச் செய்துகொள்ளும்போது மத்திய வங்கி, செலாவணி கட்டுப்பாட்டு நிறுவனம், திட்டமிடல் அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து தேவையான அங்கீகாரம் | ஆம் | | |

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா? | | | |
| | 7. அமுல்படுத்தப்படாத பணிப்பாளர் சபையின் தீர்மானங்கள் உள்ளனவா? | - | இல்லை | |
| | 8. அமைச்சரவை, அமைச்சு அல்லது திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள யாதாயினும் கட்டளைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் உள்ளனவா? | | இல்லை | |
| | 9. 1971 இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரசபை சட்ட ஏற்பாடுகள் அனைத்துக்கும் அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா? அது தொடர்பான பிரிவுகளின் இலக்கங்களை குறிப்பிடுக. | ஆம் | | |
| 5. | நட்டங்கள் | | | |
| | 1. ஆண்டினுள் இனங்காணப்பட்ட மற்றும் அடையப்பெற்ற நட்டங்கள் பற்றிய விபரங்கள் இதன் 11ஆம் இணைப்பாக குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தை பயன்படுத்தி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். உரியவாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ள மேற்படி மாதிரிப் படிவம் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | | ஏற்புடையதன்று |
| 6. | பயன்படுத்தப்படாது உள்ள உபயோகிக்கப்படாத வளங்கள் | | | |
| | 1. நடவடிக்கைக்காக ஆயத்தப்படுத்தப்பட்டுள்ள போதிலும் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாத யாதாயினும் பொறி சாதனங்கள் அல்லது உபகரணங்கள் காணப்படுகின்றனவா? | | இல்லை | |
| | 2. குறைப்பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படுகின்ற யாதாயினும் பொறி, இயந்திர சாதனம் அல்லது உபகரணங்கள் உள்ளனவா? | | இல்லை | |
| | 3. அகற்றுவதற்காக வைக்கப்பட்டிருக்கின்ற அல்லது மேலதிக அல்லது மிகையான அல்லது காலங்கடந்த சொத்துக்கள் உள்ளனவா? | ஆம் | | |
| | 4. பொருத்தல்களை எதிர்பார்த்துக் காணப்படுகின்ற பொறி, இயந்திர சாதனம் போன்றன காணப்படுகின்றனவா? | | இல்லை | |
| | 5. உபயோகத்திற்கு பயன்படுத்தப்படாது வீணாக வைத்திருக்ககக்கூடிய வளங்கள் தொடர்பாக | | | ஏற்புடையதன்று |

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| | காணப்படுகின்ற தகவல்கள் இதன் 12ஆம் இலக்க இணைப்பாக குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தைப் பயன்படுத்தி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். உரியவாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ள மேற்படி மாதிரிப்படிவம் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | | |
| 7. | கடப்பாடுகளும் உடன்படிக்கைகளும் | | | |
| | 1. யாதாயினும் பணிப்பாளர் ஒருவர் அல்லது கூட்டுத்தாபனத்தினால் யாதாயினுமொரு வகையில் விருப்பம் காணப்படுகின்ற உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளதா? ஆமெனில் பணிப்பாளர்களின் அந்த விருப்பம் வெளிப்படுத்தப்படுமா? | | | ஏற்புடையதன்று |
| | 2. வெளிநாட்டு வழங்குனர்கள் அலல்து கொள்வனவாளர்களுடன் யாதாயினும் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளதா? | | | ஏற்புடையதன்று |
| | 3. சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைமனுக்களில் குறைந்த விலைமனுவை சமர்ப்பித்த தரப்பினரிடமிருந்து கொள்வனவு செய்தல் அல்லது கூடுதலான விலையை சமர்ப்பித்துள்ள தரப்பினருக்கு விற்பனை செய்வது தவிர வேறு தரப்பினரிடமிருந்து கொள்வனவோ அல்லது விற்பனை செய்வதோ மேற்கொள்ளப்படக் கூடியவாறு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளனவா? | | இல்லை | |
| | 4. உடன்படிக்கைகளை மதிப்பீடு செய்யும்போது பின்வரும் பாரணிகள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதா?<br>(அ) அந்நியச் செலாவணிச் செலவினம்<br>(ஆ) கடன் நிபந்தனைகள் | | | |
| | 5. ஆரம்ப உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதியையும் தாண்டிச் செல்லும் வகையில் இறுதிப்பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றவாறான கொள்வனவுகள் அலல்து மூலதன செலவினங்களுக்கான உடன்படிக்கைகள் காணப்படுகின்றனவா? | | இல்லை | |
| | 6. ஆரம்ப உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் மீண்டும் கேள்வி கோரல் மூலம் அல்லது விலை மனுக்கோரலின்றி மேலதிக பணிகளுக்காக மேற்படி ஒப்பந்ததாரருக்கு அல்லது வழங்குனருக்கு கையளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் இருக்கின்றனவா? | | | |

| | | ஆம் | இல்லை | வேறு சுருக்க பதில்கள் |
|---|---|---|---|---|
| | ஆமெனில் அவ்வாறு கையளிக்கப்பட்ட உடன்படிக்கை அல்லது நடவடிக்கைகளின் பெறுமதி எவ்வளவு? | | | |
| | 7. பிரதானமாக இணங்கிய திகதிக்கும் அப்பால் பூர்த்தி செய்ய வேண்டிய காலம் நீடிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் அல்லது ஒப்பந்தங்கள் இருக்கின்றனவா? | | இல்லை | |
| | 8. ஒப்பந்ததாரர் கைவிட்டுள்ள யாதாயினும் உடன்படிக்கை ஒன்று இருக்கின்றதா? | | இல்லை | |
| | 9. விலைமனுக்கோரல் அல்லது கேள்வி கோரலின்றி யாதாயினும் ஒரு தரப்பினருக்கு வழங்கப்பட்ட உடன்படிக்கை இருக்கின்றதா? | | இல்லை | |
| | 10. உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை புறக்கணித்துள்ள யாதாயினும் ஒரு ஒகப்பந்ததாரர் அல்லது வழங்குனர் இருக்கின்றாரா? | | இல்லை | |
| | 11. மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதிக்குள் யாராயினும் ஒரு ஒப்பந்தாரருடன் பிணக்கொன்று எழுந்துள்ளதா? | | இல்லை | |
| | 12. ஒப்பந்ததாரர்கள், வழங்குனர்கள் மற்றும் கொள்வனவாளரிடமிருந்து அறவிட்டுக்கொள்ள வேண்டிய ஏதேனும் தண்டப்பணங்கள் அல்லது தண்டத்தொகைகள் இருக்கின்றனவா? | | இல்லை | |
| | 13. ஆண்டினுள் கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான விபரங்கள் இதன் 13ஆம் இணைப்பாக குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தைப் பயன்படுத்தி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட மாதிரிப்படிவம் இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. | | | முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட மாதிரிப்படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. |

## 8.0. நிறைவு

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தமது இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை திருப்தியான முறையில் அடைந்து கொண்டு 2013ஆம் ஆண்டில் தமது செயற்பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது என்பது எமது முடிவாகும்.

அதன் பெறுபேறாக உள்ளூராட்சி மன்றங்களின் பதவியணியினரது செயலாற்றுகையையும் அறிவையும் திருப்திகரமான மட்டத்திற்கு மேம்படுத்திக்கொள்ள முடிந்துள்ளது.

எவ்வாறாயினும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் எதிர்காலத்தில் எதிர்நோக்குகின்ற தேவைகளை பூர்த்திசெய்வதன் துரிதத் தன்மையை வளர்ப்பதற்கும் மேற்படி நிறுவனங்கள் எதிர்காலத்தில் எதிர்நோக்குகின்ற சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கும் இங்கு உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் செயலாற்றுகையை மென்மேலும் வளர்த்துக்கொள்வது அத்தியாவசியமாகும் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள் அவற்றில் சேவையாற்றுகின்ற அலுவலர்கள் மற்றும் வியாபார பிரதிநிதிகளின் அறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் புதிய தொழில் நுட்பத்தை பெற்றுக்கொடுப்பதும் முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சி நடடிக்கைகளை மென்மேலும் வலுவூட்டப்பட வேண்டுமென்பதும் எனது அவதானிப்பாகும்.

விளைதிறன்மிக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது மற்றும் ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொடுப்பதன் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களின் தரம் பற்றிய நியமங்களை அடைந்து கொள்வதற்கு முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகுகளுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதும் அவதானிக்கப்படுகின்றது.

மேலும் பாடநெறிகளின் பாடவிதானத்தில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்காக தற்போது காணப்படுகின்ற பாடநெறிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பவர்களது பின்னூட்டலை பெற்றுக்கொள்ளும் வகையில் பொருத்தமான பின்னாய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவது உகந்ததாகும் என்பதும் மேலும் அவதானிக்கப்படுகின்றது.

கணினி சம்பந்தமான திறமைகள் மற்றும் பல்வேறு துறைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற புதிய வெளியீடுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி புதிய அறிவையும் தொழில்நுட்பத்தையும் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக உள்ளூராட்சித்துறைக்கு வினைத்திறனும் விளைதிறனும் மிக்க சேவையை ஆற்றுவதற்கு நிறுவனத்திற்கு நூலக ஆற்றல்களை ஏற்படுத்தும் வகையில் நிறுவனத்தின் நூலகத்தை மீளமைத்து அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்வதும் அத்தியாவசியமாகும்.

நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவற்றின் ஊடாக பெற்றுக்கொடுக்கப்படுகின்ற ஏனைய சேவைகளுக்கு நிலவுகின்ற உயர்மட்ட கோரிக்கை கவனத்தில் கொள்ளும்போது இந்த நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கு போதியளவு இடவசதிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் தேவையும் இங்கு அவதானிக்கப்படுகின்றது. தற்போது இந்த நிறுவகம் பழைய கட்டிடம் ஒன்றில் நடாத்திச் செல்வதன் காரணமாக அதனை மென்மேலும் விஸ்தரிக்கும் ஆற்றல் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. எனவே தற்போதைய கட்டிடம் காணப்படுகின்ற காணிக்கு அண்மித்த காணியில் புதிய 5 மாடி கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பவர்கள் மற்றும் தகுதிவாய்ந்த வளவாளர்களை கவரும் வகையில் கேட்போர் கூடம், நூலகம், உணவுச்சாலை மற்றும் ஏனைய வசதிகளை உள்ளடக்கியதாக தேவையான சகல வசதிகளையும் கொண்ட பூரணமான வகையில் இந்த புதிய கட்டிடத்தை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் நிறுவகத்திற்கு உரித்தான வாகனக்குழுமத்தை அபிவிருத்தி செய்வதும் அவசியமாகும். தூரப்பிரதேசங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு இது அத்தியாவசியமான காரணியொன்றாகும்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே அதிகாரப்பகிர்வுக்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளும் மேற்படி நிறுவனங்களின் செயலாற்றுகையை மேம்படுத்திக்கொள்ளத் தேவையான பயிற்சிகள், செயலமர்வுகள் உள்ளடங்கலாக மாகாண சபைகளினதும் உள்ளூராட்சி மன்றங்களினதும் வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்க செயலாற்றுகைக்காக தொடர்ச்சியாக வசதிகளை செய்துகொடுப்பதற்கு இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். எனவே இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்ய செயற்படுவது மிகவும் முக்கியமானதாகும். அதற்கமைய 2012ஆம் ஆண்டு முதல் நிறுவகத்தின் நிர்வாக சபை மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் வழிகாட்டலுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்ற மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகள் அடுத்துவரும் 10 வருடங்களுக்கு தொடர்ச்சியாக அமுலில் இருக்கும்.

இதற்கமைய இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் 2013 ஆம் ஆண்டில் தமது இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்து கொண்டுள்ளதுடன் தமது வகிபாகத்தை கணிசமான அளவு விளைதிறன்மிக்கவாறு நிறைவேற்றிக்கொள்ள செயற்பட்டுள்ளது என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

**பணிப்பாளர்**
**இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்.**